Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1325)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 12 ஞாயிற்றுக்கிழமை (25.03.2012) பக்கங்கள் 16 ஓசை – 176

நாங்கள்நேசிக்கின்றோம் Like 13



குறி தப்பாது! 12



அலட்சியம் செய்தார்களா? 06



மகிழ்ச்சி அளிக்கின்றது 09

# நல்லிணக்கத்திற்காகவே ஜெனிவா தீர்மானம்



## கூறுகிறது அமெரிக்கா

(வோஷிங்ரன்)

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானம் நிறைவேற்றியதன் ஊடாக இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது சமரசம் மற்றும் பொறுப்புக்களைச் செயற்படுத்த விரிவான செயற்திட்டத்தை இலங்கை அரசாங்கம் முன்வைக்க வேண்டுமென அமெரிக்கா மீளவும் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்புச் சபையின் ஊடகப் பேச்சாளர் டொமி விட்டோ மேலும் தெரிவித்துள்ளதாவது,

உலகம் முழுவதும் பரந்த ஆதரவை பெற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டமையானது இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகள் மற்றும் கௌரவத்தினை முன்னெடுத்து ஒரு நீண்ட சிக்கலான வழிமுறைகளைத் தீர்ப்பதற்கு அழைப்பு விடுத்திருக்கிறது.

இந்தியா தீர்மானத்துக்கு ஆதரவாக

15 ஆம் பக்கம் பார்க்க

## அடுத்த வாரம் பெறுபேறுகள்

(கொழும்பு)

நடந்து முடிந்த கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அடுத்த வாரத்தில் வெளியிடப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது பெறுபேறுகள் பரிசீலிக்கப்பட்டு வருவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எம்.எம்.ஜே. புஸ்பகுமார தெரிவித்தார்.

கடந்த டிசம்பர் மாதம் முடிவடைந்த கல்விப் பொதுத் தராதர சாதாரணத் தரப் பரீட்சையில் பாடசாலை மற்றும் தனியார் பரீட்சார்த்திகள் என 5 இலட்சத்து 32 ஆயிரம் பேர் தோற்றியிருந்தனர்.

சாதாரண தரப் பரீட்சைக்கு அதிக பாடசாலை மாணவர்கள் தோற்றியமை வரலாற்றில் கடந்த வருடமே முதல் தடவையாகும்.

## பிரேரணைக்கு இந்திய ஆதரவு சுயநலத்தைக் கொண்டது

### சாடுகிறது இந்து

(புதுடில்லி)

உள்நாட்டில் எதிர்கொண்டுள்ள பல்வேறு பிரச்சினைகளை சமாளித்துக் கொள்ளும் நோக்கிலேயே இலங்கைக்கெதிரான அமெரிக்காவின் பிரேரணைக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்துள்ளதாக இந்து பத்திரிகை குற்றம் சுமத்தியுள்ளது. இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைக்கு எதிராக அமெரிக்காவின் பிரேரணைக்கு இந்தியா ஆதரவு வழங்கியமையானது, இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கு உதவும் நோக்கத்திற்காக அல்ல. மாறாக இந்திய அரசாங்கம் தமது உள்நாட்டுப் பிரச்சினைகளை சமாளித்துக் கொள்ளும் நோக்கிலேயே இவ்வாறு இலங்கைக்கு எதிராக வாக்களித்ததது.

திராவிட முன்னேற்றக்

15 ஆம் பக்கம் பார்க்க

## இந்தியாவின் முயற்சியினாலேயே சமனிலையான அம்சங்கள் அறிமுகம்

### பிரதமர் மன்மோகன், ஜனாதிபதிக்கு கடிதம்

(புதுடில்லி)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்க அனுசரணையுடன் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை தொடர்பான பிரேரணையில் சமநிலையான அம்சங்களை அறிமுகப்படுத்துவதற்கு இந்தியா அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டது என இந்திய பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் பிரேரணைக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்த நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிய கடிதமொன்றிலேயே பிரதமர் மன்மோகன் சிங் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தையும் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் இந்தக் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

சாத்தியமான முன்னோக்கிய வழியை கண்டறிவதற்காக இலங்கை பிரதிநிதிகளுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணுமாறு எமது தூதுக்குழுவினருக்கு நான் அறிவுறுத்தியிருந்தேன். இப்பிரேரணையில் சமநிலையான மொழிப் பிரயோகத்தை வெற்றிகரமாக அறிமுகப்படுத்துவதில் எந்த வொரு முயற்சியையும் விட்டுவைக்கவில்லை என்பதனை மேன்மை தங்கிய நீங்கள் அறிந்திருப்பீர்கள். தீவிரவாதத்துக்கு எதிரான

15 ஆம் பக்கம் பார்க்க

## குப்பி விளக்கால் எரியுண்ட மாணவி சிகிச்சை பயனின்றி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற தீ விபத்துச் சம்பவத்தில் எரிகாயங்களுக்கு இலக்காகி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த பாடசாலை மாணவி சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

சுன்னாகம் ஸ்ரேசன் வீதியைச் சேர்ந்தவரும், மயிலணி சைவ வித்தியாலயத்தில் கல்வி

15 ஆம் பக்கம் பார்க்க

## வாக்குறுதிகளை நிறைவேற்றினால் இந்தியா ஆதரவு அளித்திருக்கும்

### என்கிறார் சம்பந்தன்

(கொழும்பு)


அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் உரிய முறையில் நிறைவேற்றப்படாத காரணத்தினாலேயே இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்தது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிடம் இலங்கை அரசாங்கம் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கை வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்பதனை வலியுறுத்தியே ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இந்தியா வாக்களித்துள்ளது.

கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படாத சந்தர்ப்பத்திலேயே இலங்கை தீர்மானம் குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

15 ஆம் பக்கம் பார்க்க

## இலவசங்களை அனுபவித்த கும்பல் நாட்டை காட்டிக் கொடுக்கிறது



### அமைச்சர் கெஹலிய சாடல்

(கொழும்பு)

பயங்கரவாதத்தை தோற்கடிக்கும் இறுதிக் காலகட்டத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சக்திகள் அதனை முற்றுமுழுதாக குழப்பிச் சதி செய்வதற்கு எவ்வாறு தமது தந்துரோபாய வழிகளை மேற்கொண்டனரோ அது போன்றே இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்ட பிரேரணையின் நிகழ்ச்சி நிரல் அமையப்பெற்று

15 ஆம் பக்கம் பார்க்க

## நிலையான சமாதானத்தை ஏற்படுத்த ஜெனிவா தீர்மானம் வழிகோலும்

### மன்னிப்புச் சபை தெரிவிப்பு

(ஜெனிவா)

நிலையான சமாதானத்தை ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுத் தீர்மானம் வழிகோலும் என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னரும் இலங்கையில் மனித உரிமை நிலைமைகள் திருப்தி அளிக்கும் வகையில் அமையவில்லை என சர்வதேச மன்னிப்புச் சபையின்

15 ஆம் பக்கம் பார்க்க

## இந்தியாவுக்கு அச்சுறுத்தல் எச்சரிக்கிறார் கல்கட்



(புதுடில்லி)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்தமையானது, இந்தியாவிற்கு பாதுகாப்பு ரீதியான அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக இந்திய அமைதிப்படையின் தளபதிகளில் ஒருவரான லெப்டினன்ட் ஜெனரல் ஏ.எஸ்.கல்கட் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

15 ஆம் பக்கம் பார்க்க

# பண்ணைச் சந்தியில் 'யாழ். நங்கை' சிலை அமைப்பதற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தீவக மக்களை வரவேற்கும் 'யாழ். நங்கை' யாழ். பண்ணை சுற்றுவட்ட வீதியின் மத்தியில் நிறுவப்படவிருப்பதாக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

குறித்த வீதிப்பகுதிகள் காப்பெற் இடப்பட்டு அழகுபடுத்தப்படும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சுற்றுவட்டப் பகுதி தற்சமயம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. அதன் மையப்பகுதியில் யாழ். நங்கையின் சிலை நிறுவப்பட்டு சுற்றிவர புற்றரையாக மாற்றப்பட்டு அழகுபடுத்தப்படவுள்ளது.

இதேவேளை, யாழ். நகரில் அமைந்துள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சிலைகளும் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் முத்திரைச் சந்தியில் சங்கிலிய மன்னனின் சிலை ஏற்கனவே புனரமைக்கப்பட்டுள்ளது. யாழ். புல்லுக்குளம் சந்தியில் அமைந்திருந்த முன்னாள் அமைச்சர் அமரர் திருச்செல்வத்தின் சிலையும் அப்பகுதியில் புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

அத்துடன் முன்னைய யாழ். மாநகர சபை அமைந்திருந்த பகுதியில் நிறுவப்பட்டிருக்கும் அமரர் அல்பிரட் துரையப்பாவின் சிலையும் புனரமைக்கப்படவுள்ளதுடன், அமரர் அப்பாப்பிள்ளை அமர்தலிங்கத்தின் சிலையும் நிறுவப்படவுள்ளதாகவும் யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார். (பா)

# வெட்டியவர்கள் கைது வெட்டிய வாளும் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பாசையூர் பகுதியில் நேற்று முன்தினம் ஓட்டோ ஒன்றில் பயணித்த இளைஞர்கள் மீது வாள்வெட்டினை மேற்கொண்ட 5 பாசையூர் இளைஞர்கள் நேற்று யாழ். பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இளைஞர் குழுவினரினால் வாள்வெட்டிற்கு இலக்காகி படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் இளைஞர் யாழ். பொலிஸாரிடம் மேற்கொண்ட முறைப்பாட்டையடுத்து இந்த 5 இளைஞர்களும் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து வாள் ஒன்றும் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது. குறித்த 5 இளைஞர்களும் யாழ். பொலிஸாரினால் யாழ். நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட வேளை எதிர்வரும் 6 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (பா,எஸ்)

# காரைநகரில் பகல் வேளை 'பிள்ளையார்' களவு போனார்

(யாழ்ப்பாணம்)



காரைநகர் தன்னைப் பிள்ளையார் கோவிலின் காலத்தால் பழமையான எழுந்தருளி விக்கிரகம் நேற்று நண்பகல் 12.00 இற்கும் 2.00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் காணாமற் போயுள்ளது.

ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுள்ள நிலையில் கோவிலில் ஒரு இடத்தில் எல்லா விக்கிரகங்களும் வைக்கப்பட்டிருந்தன.

குறித்த இடத்தின் பூட்டை உடைத்து சுமார் ஒன்றரை அடி உயரமான ஐம்பொன் விக்கிரகம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

மேற்படி களவு குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஒரு மாத காலத்திற்குள் காரைநகர் கிட்டங்கிப் பகுதியில் உள்ள நாச்சிமார் கோவிலும் உடைக்கப்பட்டு விக்கிரகங்கள் களவாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கூட்டுறவு சமூகத்தால் அரச அதிபர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கூட்டுறவு சமூகத்தினர் ஒன்றிணைந்து யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமாரை கௌரவித்தனர்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று மாலை 3.30 மணிக்கு இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வில் கூட்டுறவு சமூகத்தினால் பொன்னாடை போர்த்தியும் நினைவுப் பரிசில்கள் வழங்கியும், வாழ்த்து மடல் வழங்கியும் கௌரவித்தனர்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட 8 பெண்களில் ஒரே ஒரு தமிழ்ப் பெண்ணாக தெரிவுசெய்யப்பட்டு ஜனாதிபதியால் விருது பெற்றதைத் தொடர்ந்தே கூட்டுறவாளர்களினால் கௌரவிக்கப்பட்டார்.

இதன்போது யாழ். மாவட்ட கூட்டுறவு சங்கத்தினரால் மகஜர் ஒன்றும் அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் கே.அருந்தவநாதன், யாழ். மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் இராஜாராம், கூட்டுறவு சபைச் செயலாளர் திருமதி வே.செல்வரத்தினம் மற்றும் கூட்டுறவு உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (எஸ்)

# கைதிக்கு ஹெரோயின் கொடுத்தவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் உள்ள கைதிக்கு போதைப்பொருள் விநியோகித்த ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். நேற்றுப் பகல் வேளை சிறையில் உள்ளவரை தன்னுடைய உறவினர் எனக்கூறிக்கொண்டு உள்ளே சென்ற நபர் ஒருவர் கைதி ஒருவருக்கு ஹெரோயின் விநியோகித்த வேளை சிறைக்காவலர்களால் அடையாளம் காணப்பட்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

விரைந்து செயற்பட்ட பொலிஸார் குறித்த நபரை கைதுசெய்து நீதவானின் வாசஸ்தலத்தில் ஆஜர்செய்தனர். இவரை எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி மா.கணேசராசா உத்தரவிட்டுள்ளார். (எஸ்)

## விசேட தேவையுடையோர் விண்ணப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)


விசேட தேவையுடைய மாணவர்களின் புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் சகல பாடசாலைகளையும் அனுப்பிவைக்குமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

தரம் 5 மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்கள் மாத்திரமே இவ்விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தியாக்கி அனுப்பிவைக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்தல் விடுத்துள்ளார். (எஸ்)

# துண்டுப் பிரசுரம் வெளியிட்டு மாடு வெட்டு

## பொலிஸாரின் தலையீட்டால் தடுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)



காளை மாட்டின் படம் போட்டு வெளிவந்த துண்டுப் பிரசுரம் யாழ்ப்பாணத்தில் சற்று வித்தியாசமாக இருந்தது.

இன்று வெட்டப்படும் மாடு நேற்றுக் காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை பண்ணை மீன்சந்தைக்கு முன்பாக காட்சிப்படுத்தப்பட்டது. இந்த விடயத்தை தெரியப்படுத்தி குறித்த மாட்டிறைச்சிக் கடை உரிமையாளரால் விளம்பரம் ஒன்று வெளியிடப்பட்டிருந்தது.

அதில் ஐரோப்பிய இனமான குறித்த மாடு யாழ்ப்பாணத்தில் கடந்த 60 ஆண்டு காலத்தில் ஆகக்கூடிய நிறையாக அரச பண்ணையால் வளர்த்தெடுக்கப்பட்டது.

இதன் தற்போதைய நிறை 2500 றாத்தல் ஆகும். இது இலட்ச ரூபா பெறுமதி எனக் கணிக்கப்பட்டுள்ளதாம்.



மேலும் குறித்த மாடு சுகாதாரப் பகுதியினரின் பரிசோதனைகளின் பின்னர் வெட்டப்படவுள்ளதாகவும் அத் துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதேவேளை குறித்த மாட்டினை வெட்டுவதை தடுப்பதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர். இதனால் மாடு வெட்டுவது நிறுத்தப்பட்டுள்ளதாகவும், மீறி வெட்டினால் குறித்த நபர்களை கைதுசெய்யவும் யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா உத்தரவிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (எஸ்)

# காணி இல்லாத காணிக்கந்தோர்

பருத்தித்துறை காணிக்கந்தோருக்கு சொந்தக் காணியும் நிரந்தர கட்டடமும் இல்லாமல் காணிக்கந்தோர் அதிகாரிகள் இடம் தேடி வருகின்றனர்.

இக்கட்டடம் பருத்தித்துறை வட இந்து பாடசாலைக்கு முன்பாக 20 வருடங்களுக்கு மேலாக தனியாரின் கட்டடத்தில் இயங்கி வந்துள்ளது.

தற்போது இக்கட்டடமானது தினமும் சுவர்ப் பூச்சுக்கள் உடைந்து விழுகின்றமையால் ஊழியர்களுக்கு உயிராபத்து ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தில் காணிக்கந்தோர் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் வேறு கட்டடம் தேடி வீடு வீடாக கேட்டு வருகின்றமையைக் காணக்கூடியதாகவுள்ளது. (116)

## மீளாய்வுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான முன்னேற்ற மீளாய்வு தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பொருத்தமான ஆவணங்களுடன் சகல அதிபர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.




சாமஸ்ரீ தேசிய பட்டமளிப்பு விழாவில்
எமது நண்பனும் பாஷையூர் மண்ணின்
மைந்தனுமாகிய

திரு. மரியநாயகம் சுவீர்சன் B.B.A (hons)

அவர்கள் "சாமஸ்ரீ தேச கீர்த்தி"
எனும் தேசிய விருதை
24-03-2012 சனிக்கிழமை பெற்றதையிட்டு

இவரை பாஷையூர் மக்கள் சார்பாக
வாழ்த்துவதோடு அவரது சேவை
மேலும் சிறக்க பிரார்த்திக்கின்றோம்
- நண்பர்கள் -

(C/1339)

கௌவின் கிராபிக்ஸ் 0779053545


# குடும்பஸ்தருக்கு வாள் வெட்டு

புலோலி வல்லிபுர குறிச்சி பகுதியில் கடந்த வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு வாள் வெட்டுக்கு இலக்காகிய குடும்பஸ்தர் ஒருவரை பருத்தித்துறை பொலிஸார் மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

இச்சம்பவத்தில் அல்வாய் கிழக்கு அத்தாய் பகுதியைச் சேர்ந்த துரைராசா மகேந்திரம் (வயது - 41) என்பவரே வாள் வெட்டுக்கு இலக்காகினார்.

மேற்படி குடும்பஸ்தர் தொழில் நிமித்தம் வல்லிபுர குறிச்சிப் பகுதியில் சென்று கொண்டிருந்த சமயம் இனந்தெரியாத நபர்கள் தலை, கால், கை, கழுத்து ஆகிய இடங்களில் வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

படுகாயமடைந்த குடும்பஸ்தரை பொதுமக்களின் தகவலின் அடிப்படையில் பருத்தித்துறை பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை தீவிர சிகிச்சைப் பிரிவில் சிசிக்சைக்காக அனுமதித்தனர்.

தொடர்ந்து விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன், குடும்பஸ்தர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (116)


## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088(C/1326)

சொர்க்கத்தை தேடிப்போக வேண்டியதில்லை, கட்டுப்பாட்டுடன் வாழ்க்கை நல்லொழுக்கமும், பிறரிடம் காட்டும் அன்பு, உதவி இவற்றால கிடைக்கும் மனநிறைவே சொர்க்கம்.

- பாபா

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## இதுவும் ஒரு பார்வை!

உழைப்பே கடவுள் என்றுதான் நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. உழைப்பை நாம் வணங்கவே செய்கிறோம். உழைக்காவிட்டால் குற்ற உணர்ச்சிகொள்கிறோம். உழைப்பு, வேலை, முன்னேற்ற இலக்குகள் என்று ஓடிக்கொண்டிருக்கிறோம். இதுதான் மனித இயல்பாக முன்வைக்கப்படுகிறது. ஆனால் இது செயற்கையாக ஏற்படுத்தப்பட்டது. மனித குலத்தின் இயல்பு இதுவல்ல என்கிறார் சமூகவியல் அறிஞரான ஜோன் செர்சான்.

அவர் அங்கம் வகிக்கும் “உழைப்பு, வேலை மற்றும் நாகரிகத்துக்கு எதிரான தெற்காசிய கூட்டமைப்பு” இந்த இயல்பை கேள்விக்குள்ளாக்குகிறது. 50 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு மாணவன் பரீட்சையில் 50% புள்ளிகள் எடுத்தால் அது பெரிய சாதனையாக கருதப்பட்டது. ஆனால் இன்று 100% புள்ளிகள் எடுத்தாலும் பெரிய செய்தியாக இல்லை. ஐம்பதுகளில் குடும்பத்தில் ஒரு உறுபபினர் வேலைக்குச் சென்றால் பலர் அடங்கிய பெரிய குடும்பத்தைக் காப்பாற்றமுடியும். ஆனால் இன்று கணவன், மனைவி இருவரும் தலா 12 மணிநேரம், பிற உறுப்பினர்கள் சுமார் 6 மணிநேரம் என ஒரு நாளைக்கு 30 மணிநேரம் இன்று வேலை செய்கிறோம்.

ஏன் இப்படி உழைப்புக்கு அடிமையாகிவிட்டோம்? தனிப்பட்ட சமூக வாழ்க்கைக்கு மனிதனுக்கு இன்று நேரமே இல்லை. கூடி மகிழ்தல், விளையாட்டு, விருந்தோம்பல் ஆகிய மனித இயல்புகளுக்கு இன்று இடமில்லாமல் போய்விட்டது. தொழில் நுட்பம் என்பது மனிதனுடைய வேலையைக் குறைப்பதற்காக உருவானது. ஆனால் நடந்தது என்ன? இன்று மனிதன் வேலை நேரம் போக படுக்கையிலும், கழிப்பறையிலும்கூட வேலை செய்யும் நிலை வந்துவிட்டது. கீழ்நோக்கி வீழ்ந்துவிடுவோமோ என்ற அச்சத்தால் உயர் நடுத்தரவர்க்கம் பீடிக்கப்பட்டு, மேலும் மேலும் உழைத்துக் கொண்டிருக்கிறது.

நமக்கு முந்தைய சமூகம் இதைப் பற்றி கேள்வி எழுப்பாத தன் சுமையை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். நமது எதிர்கால சமூகத்துக்காக இந்த உழைப்பை கேள்விக்குள்ளாக்க வேண்டும் என்கிறது இந்த கூட்டமைப்பு.

மனிதகுலத்தின் அத்தனை துன்பங்களுக்கும் நாகரிகம் என்ற பெயரில் அவன் அடைந்த வளர்ச்சிதான் காரணம். நாகரிகம் வளர்ந்ததிலிருந்து மனிதகுலத்தின் இயல்பான குணங்கள் மாறிவிட்டன.

வினோதமான புதிய புதிய தொழில்நுட்பங்கள் எல்லாம் வருகினறன. ஒரு புதிய கார் வருகிறது. ஒரு பொத்தானை அழுத்தினால் தன்னால் ஓடுகிறது. குழந்தை அழும்போது அது ஏன் அழுகிறது என்று சொல்ல ஓர் எந்திரம். இதெல்லாம் எதற்கு? நாம் நம்முடைய திறன்களை, லட்சக்கணக்கான ஆண்டுகளாக வளர்ந்த உணர்வுகளை இழந்து கொண்டிருக்கிறோம்.

1980களுக்குப் பிறகு நண்பர்களே இல்லாத மனிதர்கள் எண்ணிக்கை மூன்று மடங்காக உயர்ந்துள்ளதாக ஒரு ஆய்வு தெரிவிக்கிறது. இந்த காலகட்டத்தில்தான் எல்லோரிடமும் செல்போன் வந்து சேர்ந்தது. உலகமே ஒரே குடும்பமாக, ஒரே கிராமமாக மாறிவிட்டது. ஆனால் இது உண்மையா? நேரெதிராக இருக்கிறது உண்மை நிலவரம். நாம் மேலும் மேலும தனிமைப்பட்டுக் கொண்டே இருக்கிறோம். நமக்கு பேஸ்புக்கில் நண்பர்கள் இருக்கிறார்கள். ஆனால் நேரடி நண்பர்களை இழந்து விட்டோம்.

நாம் அனைவரும் தொழில்நுட்பத்தால் மூழ்கடிக்கப்பட்டுள்ளோம். மக்கள் தங்கள் செல்போன்களைப் பார்த்த வண்ணம் பிணங்களைப் போல நடந்து கொண்டிருக்கிறார்கள். இது எல்லாவற்றையும் தூக்கியெறியுங்கள் என்று சொல்வது, இப்போது சுலபமல்ல என்பது தெரிகிறது.

மக்கள் விரைவில் இந்த செயற்கையான தனிமனித வாழ்வில் வெறுப்படைந்து விடுவார்கள். வேறுபட்ட அனுகுமுறைகளுக்கும் வேறுபட்ட அரசியலுக்கும் அவர்கள் மாறுவார்கள் என்ற செர்சான் அவர்களது நம்பிக்கை பலிதமானால் நல்லது தான்.

– ஆசிரியர்

# சர்வதேச விசாரணை; அதிகரிக்கின்றது அபாயம்

## –ஐ.தே.கட்சி எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக சர்வதேச ரீதியான விசாரணைகள் நடத்தப்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டு ஒரு ஆண்டின பின்னர், இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணைகள் நடத்தப்படக் கூடுமென நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணைகள் நடத்தப்படும் வரையில் காத்திருக்கக் கூடாது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் கிரமமான முறையில் அமுல்படுத்தப்பட வேண்டும்.

அரசாங்கம் நாட்டையும், மக்களையும் நாட்டின் இறையாண்மையையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவினால் 2010 ஆம் ஆண்டில் இடைக்கால பரிந்துரைகள் செய்யப்பட்டன.

கைதிகள் பற்றிய தகவல்களை வெளியிடுதல், ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக் களைதல் உள்ளிட்ட சில முக்கிய பரிந்துரைகள். எனினும், இந்தப் பரிந்துரைகள் இது வரையில் அமுல்படுத்தப்படவில்லை.

இவ்வாறான காரணிகளினால் மனித உரிமை சபையில் இலங்கைக்கு எதிராக பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

ஜெனிவா பிரேரணை தொடர்பில் ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலர் முட்டாள்தனமான கருத்துக்களை வெளியிட்டு, நாட்டை மேலும் நெருக்கடி நிலைமைக்கு இட்டுச்செல்கின்றனர்.

அரசாங்கம் மக்களை பிழையான வழியில் இட்டுச் செல்லாது, மனித உரிமை சபையில் அமர்வுப் பரிந்துரைகளை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென லக்ஷ்மன் கிரியல்ல கோரியுள்ளார்.

ஆணைக்குழு பரிந்துரைகளை அமுல்படுத்துவது குறித்து பொதுவான பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும் .

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது தொடர்பில் பொதுவான பொறிமுறைமை ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென எதிர்க்கட்சிகள் கோரியுள்ளன.

# புத்தளத்தில் சடலம் மீட்பு

(புத்தளம்)

புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியபாடு கிராம கடற்கரையில் கரையொதுங்கிய ஆணொருவரின் சடலத்தை முந்தல் பொலிஸார் நேற்று சனிக்கிழமை மீட்டுள்ளனர்.

அப்பிரதேச மீனவர்கள் காலையில் வழமைபோன்று கடற்றொழிலுக்காகச் சென்றபோது கடற்கரையில் சடலமொன்று கரையொதுங்கியிருப்பதைக் கண்டு முந்தல் பொலிஸாருக்கு அறிவித்தனர். இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

சுமார் 45 வயது மதிக்கத்தக்க ஒருவரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது. சடலத்தில் ஆடைகள் எதுவும் காணப்படவில்லை. இருப்பினும் சடலத்திற்கு அருகில் துணியொன்று காணப்படுகின்றது. தலைமுடி கட்டையாக வெட்டப்பட்டுள்ளதுடன், சடலத்தின் வயிற்றுப்பகுதியில் தீக்காயங்கள் சில காணப்படுவதாகவும் முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

# தான்தோன்றீஸ்வரர் ஆலய தீர்த்தக்கேணி புனரமைப்பு

(ஒட்டுசுட்டான்)

வரலாற்றுப் புகழ்மிக்கதும், இலங்கையில் உள்ள, தான்தோன்றீஸ்வரர் ஆலயங்களில் முதன்மைபெற்றதுமான ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் தீர்த்தக்கேணி புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இத்தீர்த்தக்கேணி கடந்த 20 வருடகாலமாக புனரமைப்புச் செய்யப்படாமல் இருந்ததுடன், கடந்த இறுதி யுத்தத்தின் போது சேதமடைந்தும் காணப்பட்டது.

இந்நிலையினைப் போக்கி அழகான சுற்றுமதில்களுடன் கூடிய தீர்த்தக்கேணியாக மாற்றுவதற்கு புனரமைப்புப் பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

இத்தீர்த்தக் கேணியினைப் புனரமைப்பதற்கு புலம்பெயர் நாடுகளில் வாழும் ஒட்டுசுட்டான் வாழ் இந்து மக்கள் நிதி உதவி வழங்கியுள்ளனர். (42)

# கான்ஸ்டபிள் மரணம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின், பாதுகாப்புப் பிரிவில் செயற்பட்டு வந்த 44 வயதான பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர், உடற்பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் மாரடைப்பால் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

# வெளிவிவகார அமைச்சில் சி.ஐ.ஏ.இன் விசேட முகவர்

## சிங்கள நாளிதழ் தகவல்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சில் பணிபுரியும் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் அமெரிக்க புலனாய்வு அமைப்புக்கு தகவல் வழங்கியுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்ததையடுத்து அந்த அதிகாரி தொடர்பாக இரகசிய விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாக சிங்கள நாளிதழான திவயின தகவல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் இந்த யோசனை தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்படும் சந்தர்ப்பத்தில், அதில் கலந்துகொள்வதற்காக இலங்கைப் பிரதிநிதிகளுடன் ஜெனிவா சென்ற, இந்த பெண் அதிகாரி, அதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர், இலங்கையில் அரசசார்பற்ற நிறுவனங்களின் முக்கிய செயற்பாட்டாளர்களுடன் சுமார் 4 மணி நேரம் பேச்சு வார்த்தைகளை நடத்தியிருந்தார்.

இந்த அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாட்டாளர்களே, இம்முறை ஜெனிவா மனித உரிமைப் பேரவையில், புலம்பெயர் தமிழர்களுடன் இணைந்து இலங்கைக்கு எதிராகச் செயற்பட்டனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, குறித்த பெண் அதிகாரி, அமெரிக்காவின் புலனாய்வுப் பிரிவான சி.ஐ.ஏ.க்கு பணியாற்றி வருகின்றாரோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் யோசனை தொடர்பாக வேலைத் திட்டங்களின் போது, இலங்கைப் பிரதிநிதிகளுடன் இணைந்து பணியாற்றி, அந்த அதிகாரி, மிகவும் சூட்சுமமான முறையில், எதிர்த்தரப்புக்கு தகவல்களை வழங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

ஒரு காலத்தில், இலங்கையின் தூதுவராக சில ஐரோப்பிய நாடுகளில் பணியாற்றிய இந்த அதிகாரி, புலிகளுக்கு ஆதரவான புலம்பெயர் தமிழர்களுடன் தொடர்புகளைப் பேணி வந்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது எனவும் திவயின கூறியுள்ளது.

அதேவேளை ஜெனிவாவில் அமெரிக்காவின் யோசனை நிறைவேற்றப்பட்ட தினமான கடந்த 22 ஆம் திகதி இரவு அரசசார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் இணைந்து, ஆடம்பர விடுதி ஒன்றில் விருந்துபசாரம் ஒன்றை நடத்தியுள்ளனர் என திவயின தெரிவித்துள்ளது. இதனை ஏற்பாடு செய்திருந்த சர்வதேச அரசசார்பற்ற நிறுவனம் அதில் கலந்துகொண்டவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, பணி செய்தாகிவிட்டது (job done) என கூறியதாகவும் திவயின குறிப்பிட்டுள்ளது.

# வெளியூர் மீனவருக்கு தொழில் அனுமதி இல்லை

## - கடற்தொழில் நீரியல் வளத்துறை உதவிப்பணிப்பாளர்

(வடமராட்சி)

வளமான வாழ்க்கை வாழ்ந்த வடமராட்சி கிழக்குப் பிரதேச கடற்தொழிலாளர்கள் அப்பிரதேசத்தில் ஏற்பட்ட சுனாமி அழிவுப்பேரலை அனர்த்தம், போர் நடவடிக்கைகள், அடிக்கடி ஏற்பட்ட இடப்பெயர்வுகள் காரணமாக இடம்பெயர்ந்து மீள்குடியேறிய மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியாத நிலையில் உள்ளனர். இவர்கள் கடற்தொழில் செய்வதற்கேற்ற கடற்தொழில் உபகரணங்கள் போதியளவு மானியமாகவோ, கடனடிப்படையிலோ வழங்கப்படவில்லை. தொழில் செய்வதிலகூட பல்வேறு தடைகள், அழுத்தங்கள் உள்ளன. கடலிலும், கடல் சார்ந்த இடங்களிலும் தொழில் செய்வதற்குரிய முறையில் அனுமதியை கடற்தொழில் திணைக்களமே வழங்கும். இதை விடுத்து வேறு எவருக்கும் அனுமதி வழங்கும் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படவில்லையென யாழ்ப்பாண மாவட்ட கடற் தொழில் நீரியல் வள துறை உதவிப்பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச மண்டபத்தில் சமாசத் தலைவர் கொ.அ.ஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் சமாச அங்கத்துவ சங்கங்களின் பிரதிநிதிகள், சமாசப் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; இப்பிரதேச கடற்பரப்பில் அத்துமீறி தொழிலில் ஈடுபடும் இந்திய இழுவைப்படகுகளினால் கடல் வளம் அழிக்கப்படுவதுடன், தொழிலாளர்களின் வலைகளும் வெட்டிச் சேதமாக்கப்படுவதாக எனக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அத்துடன் இலங்கை அரசாங்கத்தினால் தடைசெய்யப்பட்ட தங்கூசிவலை, சுருக்குவலை போன்றவைகள் தொழில் செய்வதிலிருந்து முற்றாகத்தடை செய்யப்படவேண்டும் அனுமதியிலலாமல் வெளியூர் மீனவர்கள் இப்பிரதேசத்தில் தொழில் செய்ய அனுமதிக்கக்கூடாது எனவும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தாளையடி கடற்தொழில் பரிசோதகர் வி.கலிஸ்ரன், பருத்தித்துறை கிழக்கு கடற்தொழில் பரிசோதகர் எம்.இராசேந்திரன், கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசப்பிரதிநிதிகள், பொது முகாமையாளர், கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகிகள், சங்கப்பணியாளர்கள், பொதுமக்கள் ஆகியோர கலந்து கொண்டனர். (70)

# கட்டுரைப் போட்டி; முதல் பரிசு 20 ஆயிரம்

(யாழ்ப்பாணம்)

தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் இலங்கை ஒத்தியல்பு சபை உலக ஒத்தியல்பு தினத்தை முன்னிட்டு "ஒத்தியல்பு மற்றும் நம்பிக்கையான வைத்திய பரிசோதனை அறிக்கை" என்னும் தலைப்பில் கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இக்கட்டுரைப் போட்டி 19 வயதுக்குமேற்பட்டவர்கள், 19 வயதுக்கு மேற்பட்டவர்கள் என இரு பிரிவாக நடத்தப்படவுள்ளது.

மாணவர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொள்ளவுள்ள இப் போட்டியில் 19 வயதுக்குமேற்பட்டவர்கள் 500 சொற்களிலும், 19 வயதுக்குமேற்பட்டவர்கள் 750 சொற்களிலும் கட்டுரைகளைத் தயாரித்து எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், பிரதம நிறைவேற்று அதிகாரி, இலங்கை ஒத்தியல்பு சபை, இல.410/123 பௌத்தலோக மாவத்தை, கொழும்பு -7 என்னும முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

இப்போட்டியில் பங்குபற்றி வெற்றி பெறுபவர்களுக்கு 1 ஆம் பரிசாக 20 ஆயிரம் ரூபாவும், 2 ஆம் பரிசாக 10 ஆயிரம் ரூபாவும், 3 ஆம் பரிசாக 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுவதுடன், சான்றிதழ்களும் வழங்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி தொடர்பான விபரங்களையும், விண்ணப்பப் படிவத்தையும் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள தினமுரசு அலுவலகத்தில் பார்வையிடலாம்.

## முரசின் இன்றைய பலன்

(25.03.2012 -ஞாயிற்றுக்கிழமை)

கர வருஷம் மாசி பங்குனி 12 ஆம் திகதி. திருதியை சித்தயோகம் பின்இரவு 2.08 வரை. நட்சத்திரம் அச்சுவினி பிற்பகல் 5.36 வரை.

இராகுகாலம் 4.45 - 6.15 வரை.சுபநேரம் 9.15 - 10.45 வரை.

எமகண்டம் 12.15 - 1.45 வரை குளிகைகாலம் 3.15 - 4.45 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | எதிலும் ஆர்வம், பொன்பொருள்சேரும், சகோதரர்உதவி, பிரார்த்தனை பலிக்கும். |
| ரிஷபம் | உற்சாக மிகுதி குடும்பத்தில் மகிழ்ச்சி, சகோதரமனஸ்தாபம் தீரும், அந்நியர் உதவி. |
| மிதுனம் | விடா முயற்சி, குடும்ப ஒற்றுமை, சகோதர பகை அகலும், எதிர்பாராத முன்னேற்றம். |
| கடகம் | வெற்றிகிட்டும், பதவிஉயர்வு கிட்டும், குடும்பத்தில் நன்மதிப்பு, ஸ்தலவழிபாடு. |
| சிம்மம் | இலாபதினம், காரியசாதனையில் மகிழ்ச்சி, கொடுக்கல வாங்கல்களில் இழுபறி, இடமாற்றம். |
| கன்னி | புதுமுயற்சி தவிர்க்கவும், பிரயாணங்களை தவிர்க்கவும், வரவுக்கு மீறியசெலவு, அதிருப்தி. |
| துலாம் | கடன் தொல்லை, வரவும்செலவும்சமநிலை, அனுசரித்துப்போகவும், உறவினர்உதவி. |
| விருச்சிகம் | நல்லமுயற்சி, திருமண பிராப்தம், இடமாற்ற அதிருப்தி, சகோதர வழியில் தடை. |
| தனுசு | மனச்சஞ்சலம், அரசதடை நீங்கி ஆதரவு, தொழில் முதலீடு பெருகும், மகான்கள் ஆசி. |
| மகரம் | இலாபதினம், உறவினருடன் கருத்து வேறுபாடு, திருமணம்கைகூடும், வெளிநாடுசெல்லும்வாய்ப்பு. |
| கும்பம் | நன்மைகள் கூடிவரும், குள்ளமான மனிதரின் உதவி, எதிரிகள் பலவீனமடைவர், நற்செய்தி. |
| மீனம் | வீண்அலைச்சல், தடைப்பட்ட பதவி உயர்வு கிட்டும் பிரிந்தவர் கூடிவாழ்வார். கடன்கள் வசூலாகும். |

# கால்நடை அலுவலகம் இன்று திறப்பு

(முழங்காவில்)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பல மில்லியன் ரூபா செலவில் பூநகரி - வாடியடியில் அமைக்கப்பட்ட பூநகரி அரச கால்நடை வைத்தியர் அலுவலகம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் திருமதி. ஆர்.விஜயலட்சுமி கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.இளங்கோவன், விவசாய அமைச்சு செயலாளர் யு.எல்.எம்.ஹால்டீன், கிளி.மாவட்ட அரச அதிபர் திருமதி ஆர்.கேதீஸ்வரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளார்கள். புதிய அலுவலகத்தை பிரதம விருந்தினர் ஆர்.விஜயலட்சுமி திறந்து வைக்கவுள்ளார். (112)

# மண்ணெண்ணெய் முத்திரையை பெற்றுத்தருமாறு கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கோரக்கன்கட்டு பிரதேசத்தில் உள்ள மக்களில் 214 குடும்பங்களுக்கு சமுர்த்தி முத்திரை, மண்ணெண்ணெய் முத்திரை என்பன வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்தில் 454 குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில், 240 குடும்பங்களுக்கு முத்திரை விநியோகம் வழங்கப்பட்டுள்ள நிலையில் மண்ணெண்ணெய்யும் மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

எனினும் ஏனைய குடும்பங்களுக்கு இவ் முத்திரை விநியோகம் வழங்கப்படாததால், தாம் பெரும் கஷ்டநிலைக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

வறுமைக்கோட்டில் வாழ்ந்து வரும் எமக்கு மண்ணெண்ணெய் முத்திரை யையாவது பெற்றுத்தருமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் இம்மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (கே)

# கூட்டுறவு பணியாளர்களுக்கு 15 வீதம் படி; கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் உள்ள கூட்டுறவுப்பணியாளர்களுக்கு 18/2010ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் வாழ்க்கைச் செலவுப்படியாக 5250 ரூபாவினையும், 600 ரூபாவினையும் சேர்த்து 1.1.2011 இல் இருந்து 5850 ரூபாவிற்கு மேற்படாது வழங்கவேண்டுமெனவும், 1.1.2012இல் இருந்து படிகள் அடங்காத சம்பளத்தின் 15 வீதத்தின் விசேட படியாகவும், சங்கத்தின் நிதிநிலைக்கு ஏற்றவாறு சங்க இயக்குநர் சபையின் தீர்மானத்துடன் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அனுமதி பெற்று வழங்க வேண்டுமென வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இவ்வறிவுப்புத் தொடர்பாக வடமாகாணத்தில் உள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர்களுக்கும் 02/2012 இலக்க சுற்றுநிருபமொன்றை ஆணைக்குழு செயலாளர் அனுப்பி வைத்துள்ளார்.

அச்சுற்று நிருபத்தின் பிரகாரம் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வாழ்கைச் செலவுப்படி, விசேடபடி வழங்கும்போது ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கான பங்களிப்பு மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை என்பன கணிப்பீடு செய்யும் போது இவ் விசேட படிகள் அவற்றுள் உட்படுத்தலாகாது என்றும், ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு இவ்விசேட படிகள் உரித்துடையதல்ல என்றும் மேற்குறிப்பிட்ட விசேட படிகளை கணிப்பீடு செய்யும் போது பிழையாகக் கணிப்பீடு செய்தமையால் அல்லது ஊழியர் தற்போது பெறும் படிகள் தவிர்ந்த அடிப்படைச்சம்பளம் பிழையாக உள்ளமையால் கூடுதலான கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ள எந்தவொரு பணத்தையும் அவ்வூழியருடைய சம்பளத்திலிருந்து ஒரு தடவையிலோ அல்லது ஒரு பகுதியாகவோ பின்னர் அறவிடப்படவேண்டும். அவ்வாறு மீள அறவிடப்படும் பணம் ஊழியரது சம்பளத்தின் 40வீதம் வரையறைக்கு உரியதல்ல.

இவ் விசேட படிகள் கொடுப்பனவு சம்பந்தமாக சங்கத்தின் இயக்குநர் சபையால் எடுக்கப்படும் தீர்மானம் 25.04.2012ஆம் திகதிக்கு முன்னர் ஆணைக்குழுவிற்கு அறியத்தரப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சுற்று நிருபத்தின் பிரதிகள் செயலாளர், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு, கொழும்பு. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும், வடமாகாணம். வடமாகாணத்திலுள்ள சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும். வடமாகாணத்திலுள்ள அனைத்து கூட்டுவு ஊழியர் தொழிற்சங்கங்களுக்கும்அனுப்பி வைக்கப்படடுள்ளது.

# பிள்ளைகள் நடமாடும் சூழலில் பெற்றோர் கவனமாக இருக்க வேண்டும்

## சிறுவர் நல அபிவிருத்தி உத்தியோகத்தர்

(யாழ்ப்பாணம்)

14 முதல் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களே பெரும்பாலும் கட்டுப்பாடுகளை மீறிச் செல்பவர்களாக காணப்படுவதாக உடுவில் பிரதேச சிறுவர் நல அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சந்திரா நக்கீரன் தெரிவித்தார்.

சுன்னாகம் தெற்கு கலைவாணி சனசமூக நிலையத்தில், கடந்த 20 ஆம் திகதி நடைபெற்ற சிறுவர் பாலியல் துஷ்பிரயோகமும் மக்களுக்கான விழிப்பூட்டலும் என்னும் தலைப்பிலான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பாலியல் துஷ்பிரயோகங்களினால் பெண்பிள்ளைகளே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். சிறு பிள்ளைகளுக்கு ஏற்படுகின்ற பெரும்பாலான பாதிப்புக்கள் உறவுக்காரர்களாலேயே ஏற்படுகின்றன. எனவே பிள்ளைகள் நடமாடும் சூழல் பற்றிப் பெற்றோர்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

கடைசியில் நிற்கிற மாமா கையில பிடிக்கிறார், கன்னத்தில் கிள்ளுகிறார் என்று பிள்ளைகள் பயந்து சொன்னால் அம்மாமார் அதைப் பெரிதாக கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை. இதனால் பிள்ளைகள படிப்படியாக சகிப்புத் தன்மையுடன் சீரழிவுக்குள் சிக்கிக் கொள்கிறார்கள்.

துஷ்பிரயோக சம்பவங்கள் எதுவும் நடைபெற்றால் இதன்நிமித்தம் பிள்ளைகளே பாதிக்கப்படுகிறார்கள். இது மறைத்து வைத்திருக்க வேண்டிய விடயமல்ல. உடனடியாக பொலிஸாருக்கோ அல்லது சுகாதாரப் பகுதியினருக்கோ மற்றும் சிறுவர் பகுதிக்கோ தெரியப்படுத்தி இதனால் வரக்கூடிய பாதிப்புக்களைத் தடுக்க முயற்சிக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (120)

# நிதி ஒதுக்கீடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பொது விளையாட்டு மைதானத்தை புனரமைப்பதற்கு விளையாட்டுத்துறை அமைச்சினால் 4.65 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் முன்னர் விளையாட்டுத்துறைசார் பயிற்சிகளை முன்னெடுப்பதற்கு பிரதான மைதானமாக காணப்பட்டதுடன், பின்னர் இடம்பெற்ற யுத்தத்தால் இம்மைதானம் சேதமடைந்தது.

இந்நிலையில் தற்போது இங்குள்ள விளையாட்டு வீரர்கள் பயிற்சியை மேற்கொள்வதற்கு ஏதுவாக விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அழுத்கமகே இந்நிதியை வழங்கியுள்ளார். (04)

# வடக்கில் மருத்துவ சேவையில் ஒரு மைல் கல்

80 படுக்கைகளுடன் அனைத்து நவீன வசதிகளையும் கொண்ட மருத்துவ நிலையம்



1979

இன்று ஞாயிற்றுக்கிழமை

காலை 9.30 மணிக்கு வைபவ ரீதியாக

யாழ். மக்களுக்கு சமர்ப்பணம்



2012

Northern Central Hospital

*for a healthier tomorrow*

342, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

Web: www.nchjaffna.com

Email: nchjaffna@gmail.com

# தோல்விக்கான எச்சரிக்கை அறிகுறிகளை இலங்கை அலட்சியம் செய்ததா?

ஐ.நா அமைப்பை அடிப்படை யாகக் கொண்ட உயர் உத்தியோகத் தரும் மற்றும் இலங்கையின் உறுதியான, மிகவும் சக்தி வாய்ந்த சர்வதேச நண்பருமான ஒருவர் ஒருமுறை என்னிடம் சொன்னது, “இலங்கை அதன் முக்கியமான பாதுகாப்பு நலனைக் கருத்தில் கொண்டு ஒரு வகையான நிபந்த னைகளின் கீழ் சரணடைந்தோ, அல்லது விட்டுக் கொடுப்பை செய்தோ அதன் நண்பர்களுக்கு உதவவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால், நிச்சயம் உதவ வேண்டும்.”

ஆறு மாதங்களுக்கு முன்பு தீர்க்கதரிசனம் போல நான் விடுத்த எச்சரிக்கை அணு அளவும் பிசகவில்லை. இந்தியா மாறக்கூடிய ஆபத்தையும் அதைத் தடுப்பதற்கு செய்யவேண்டியது என்ன என்பதைப் பற்றியும் மூன்று வருடங்களுக்கு முன்னமே என்னால் அச்சு எழுத்துக் களில் விளக்கப்பட்டிருந்தது. பிரபாகரனின் மரணத்துக்கு சரியாக மூன்று மாதங்களுக்கு முன்பாக “இலங்கையின் இருப்பைக் குறித்த இந்தியாவின் யதார்த்தம்” என்கிற தலைப்பிலான கட்டுரையொன்றிலேயே அதை நான் எழுதியிருந்தேன்.

“இலங்கையின் வடபகுதியில் உள்ள தங்கள் இன உறவுகள் பற்றி தமிழ்நாட்டில் ஏற்படும் உணர்வலை களை ஒதுக்கித் தள்ளி புதுடில்லி உணர்ச்சியற்று இருக்கிறது, என்கிற குற்றச்சாட்டு காரணமாக தமிழ் நாட்டில் பிரிவினைவாதம் மீண்டும் கிளர்ந்தெழுவதை இந்தியாவால் தாங்கிக் கொள்ள முடியாது.

இந்திய ஒன்றியத்தின் மிக முக்கியமானதும் செல்வாக்கானது மான ஒரு மாநிலம் தமிழ்நாடு, மற்றும் புதுடில்லி மீது அழுத்தங்கள் ஆரவாரிப்புடன் தள்ளப்படும்போது, இலங்கையும் சிங்களவர்களும் அதிக எடையினைச் சுமக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு தள்ளப்படுவார்கள். அது புதுடில்லி, மிகவும் முக்கிய மான மூலோபாயமான தேரிவை எதிர்கொள்ள நேரிடும்போது நடைபெறும். அப்போது கொழும்பை விட சென்னையையே புதுடில்லி நிச்சயம் தெரிவு செய்யும். அப்படி ஏற்படும்போது, பிரச்சினைகளை எதிர்கொள்வது இலங்கையைப் பொறுத்த விடயம்....”

இராணுவ வெற்றியைத் தொடர்ந்து பின் விளைவாக ஜூன் - ஜூலை 2009, மற்றும் முக்கியமாக குறிப்பிடத்தக்க சில விடயங்களுக் காக இன்றும், ஜெனிவா, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நாங்கள் பெற்றுவரும் இராஜதந்திர வெற்றிகள் எல்லாம், ஒரு விவாதப் பரிவர்த்தனையாக மாறி வருகிறது என்பதுதான் நான் தொடர்ந்து வலியுறுத்தி வரும் ஒரு கருத்து.

“முழுதானதும், வேண்டுமானால் நியாயமான முறையில் உயர்த்தப் பட்டதுமான 13ஆவது சட்ட திருத் தத்தை அமுல்படுத்தும் நடவடிக்கை தான், இந்தியாவுடன் நாங்கள் மேற்கொள்ளும் போருக்குப் பின்னான உறவுகளின் மூலைக் கல்லாக இருக்கும், இந்தியாவுடனான அந்த உறவானது, சர்வதேசத்துடன் நாங்கள் மேற்கொள்ளப்போகும் உறவுகளின் மூலைக்கல்லாக இருக்கும்.

நமது அயலவர்கள், நமது கண்டத்தை சேர்ந்தவர்கள், நமது இயற்கைத் தொகுதியில் உள்ள வளரும் உலக நாடுகள் மற்றும் ரஷ்யாவும் சேர்ந்து, நமக்கு ஆதரவளித்தால், புலிகளின் புலம் பெயர் பிரிவுக்கும் அவர்களின் செல்வாக்கில் உள்ள ஐரோப்பிய கட்டமைப்புகளுக்கும் எதிராகவும் நம்மால் வெற்றி பெற முடியும்.

இந்த மூலோபாயத்தை வைத்து நோக்கும்போது. இந்தியாவின் ஆதரவு மிகவும் முக்கியமானது. இந்தியாவின் ஆதரவு இல்லை யென்றால் மற்றவை யாவும் நம்மை மேற்கத்தைய அழுத்தம், மற்றும் நிர்ப்பந்தங்களுள் தள்ளிவிட்டு, நம்மைவிட்டு வெகுதூரம் விலகிவிடும். சீனாவால் மட்டும் முழுப் பாரத்தையும் தாங்க முடியாது....

“இறையாண்மை வலியுறுத்தப்பட வேண்டியது மட்டுமல்ல, அது பாதுகாக்கப் படவேண்டியதும் மற்றும் பாதுகாப்பு அளிப்பதுமாகும். வடக்கு மற்றும் தெற்கு, கிழக்கு




மற்றும் மேற்கு என் திசைகாட்டியின முள் காட்டும் புள்ளிகளிலெல்லாம் இலங்கை தனது இறையாண்மையை பாதுகாக்க முடியாது. அதிகார சமநிலையுள்ள ஒரு பல - துருவ உலகத்தில் மட்டுமே அது தனது இறையாண்மையை பாதுகாக்க முடியும். வலியுறுத்திச் சொல்வதானால், இந்தியாவை நாம் இழந்துவிட்டால், கூட்டுச்சேரா அணியினரையும்கூட நாம் இழந்து விடுவோம், மற்றும் (1987இல் நடந்தது போல) நாம் நிர்வாணமாக்கப் பட்டுவிடுவோம்.”

இந்த முன்னெச்சரிக்கை செய்யும் நிலை இப்படியே தொடர்ந்தால் ஆயுத மோதல் ஏற்படக்கூடிய முன்னறிவித்தலுக்கான சாத்தியம் உருவாகும்.

– தயான் ஜயதிலக
கட்டுரையிலிருந்து.

## பிரான்சில் தீவிரவாதம்!



தீவிரவாதிகளின் இணையத் தளங்களைத் தேடிப் படிப்பவர் களுக்கு சிறைத் தண்டனை விதிக்கப் படும் என்று பிரான்ஸ் ஜனாதிபதி நிகோலஸ் சர்கோசி அறிவித் துள்ளார். “சர்வதேச அளவில் அதி கரித்து வரும் தீவிரவாதத்தை ஒடுக்க வேண்டியது அவசியம். இதில் பிரான்சும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, தீவிரவாதிகளின் இணையத் தளங்களைப் படிப்பவர்கள், தீவிரவாதிகளை உருவாக்குவது போன்ற கருத்துகளை இன்டர்நெட்டில் வெளியிடுபவர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கும் வகையில் புதிய சட்டம் கொண்டு வரப்படும்” என்று கூறியுள்ளார் பிரான்ஸ் ஜனாதிபதி.

## நான்கு தந்தங்களுடன் ஒரு யானை

Paleontology எனப்படும் பண்டைக் காலத் தடயங்களை ஆராயும் துறையில் என்னென்னவோ அதிசயங்களெல்லாம் கிட்டும். ஆனால் எந்தத் தகவலும் உடனடியாக ஒரு புரியக் கூடிய உருவில் கோர்க்கப்பட்டுக் கொடுக்கப் படாது. தடயம் கிட்டி, அதைப் பிரித்து அறிந்து, பல பின்னணிகளில் பொருத்திப் பார்த்து எது இருப்பதில் நம்பகத் தன்மை உள்ள விளக்கமாக



இருக்கும் என்று கருதி, அதைப் பலர் கலந்தாலோசித்து, பின் ஒரு விளக்கமாகத் தருகிறார்கள். சில ஆண்டுகள் கூட இல்லை, சில வாரங்கள் முன்பு நடந்த ஒரு சம்பவத்தை அறியவே நிறைய விசாரணைகளும், “துப்புத் துலக்கலும்” தேவைப்படுகின்றன.

இந்த சம்பவம் சுமாராக எழுபது இலட்சம் வருடங்கள் முன்பு நடந்திருக்கக் கூடிய ஒரு நிகழ்ச்சி. ஒரு கூட்டமான மிருகங்கள் தண்ணீர் மிகக் குறைவாக ஓடிய ஒரு பரப்பின் வழியே பயணித்து ஆபிரிக்காவுக்குள் போகின்றன. அவை போகிற போது விட்டுச் சென்ற தடயங்கள் இத்தனை காலமாக அப்படியே இருந்திருக்கின்றன. அவை என்ன வகை மிருகங்கள் என்று புரியாமல் பண்டைத் தடயவியலாளர் தடுமாறிக் கொண்டிருந்தனர்.

தடயங்கள் அப்பகுதி மக்களுக்குப் பல காலமாகத் தெரிந்திருந்தவை. அறிஞர்களுக்குத் தெரிந்து 10 - 12 வருடங்களாயிருக்கின்றன. 2003 இல் ஒரு சின்னஞ்சிறிய கமெராவைப் பட்டம் ஒன்றில் சேர்த்து உயரப் பறக்கவிட்டு எடுத்த பல படங்களைத் தொகுத்து நோக்கியபோது இவை அனைத்தும் ஒரே கூட்டத்து மிருகங்களால் உருவானவை என்பது தெரிந்திருக்கிறது.

பிறகு அங்கு கிட்டிய எலும்புத் துண்டங்களின் உறைந்து இறுகிய வடிவுகளை வைத்து இவை அனைத்தும் பல இலட்சம் வருடங்கள் முன்பு வாழ்ந்த யானை வகை மிருகங்கள் என்று முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இந்த யானைகளுக்கு நான்கு தந்தங்கள் இருந்திருக்கின்றன என்பது வரை தெரிந்திருக்கிறது.

சங்கரன் கோவில் தேர்தல் முடிவுகள் எதிர்பார்த்த மாதிரியே அமைந்திருப்பதால் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை. இடைத்தேர்தல் அறிவித்த தினம் தொடங்கியே போட்டி இரண்டாமிடத்திற்குத்தான் என்றாலும், கிடைத்த தோல்வியை ஒப்புக் கொள்ளும் பக்குவம் யாரிடமுமே இல்லை. ஆளாளுக்கு ஒரு சால்ஜாப்பு சொல்லி வருகின்றனர்.

தவிர, விழியைப் புரட்டி, பல்லைத் துறுத்தி, நாக்கை மடித்து, கையை நீட்டி சினிமா பாணியில் சவால்விட்ட விஜயகாந்த், டெபாஸிட்டும் இழந்து,

## தீ குளிப்பும் டீ குடிப்பும்!



நாலாவது இடத்திற்கும் தள்ளப்பட்டு விடுவோ மென்பதை எதிர்பார்த்திருக்க மாட்டார்.

இரண்டாமிடத்தில் எதிர்பார்க்கப்பட்ட மதிமுக மூன்றாமிடத்திற்கு தள்ளப்பட்டாலும், அவர்களது தோல்வி மற்றைய இருவர்களதை விட கௌர வமானதாகவே நோக்கப்படுகிறது.

அழகிரி வழக்கம்போல் அள்ளி வீசிய ஓட்டு வித்தியாசக் கணக்கு இம்முறையும் பலிதமாக வில்லையாதலால், கருணாநிதி, சென்றமுறை அதிமுக பெண்ணாகரத்தில் டெபாசிட் இழந் ததை நினைவு கூர்ந்து தம்மைத் தாமே ஆறுதல் படுத்திக் கொண்டுள்ளார். பிரசாரம் ஓய்ந்த மறுதினம் ஆளுங்கட்சி சார்பிலும், தி.மு.க சார்பிலும் பண விநியோகம் தாராளமாக நடைபெற்றதாக வைகோ கூறியுள்ளார்.

மற்றபடி இந்தத் தேர்தல் பற்றியோ, இத்தேர்தலில் அதிமுக பெற்ற வெற்றி பற்றியோ பிரஸ்தாபிக்க பெரிதாக எதுவும் விஷயம் இல்லை. ஆனால் கருணாநிதி அவர்கள் தமது பிரசாரத்தின் போது வீராவேசமாக பேசிய பராசக்தி பாணி வசனம் ஒன்று இங்கு விஷயமாகிறது. ஜெயலலிதா, அண்ணா நூலகத்தை மருத்துவமனையாக மாற்றும் நாள்தான் கருணாநிதி தீக்குளிக்கும் நாளாக இருக்கும் என்று வீரம் பேசியுள்ளார். அரசியல் சட்டத்தை அவமதிக்கவில்லை, வெறும் பேப்பரைத்தானே கிழித்தோம் என்றவர்கள், தீ இல்லை டீ என்று சொல்ல எவ்வளவு நேரம் ஆகும்.


- இ.வ.

## அமலாபால் விலகினார்



அமீர் இயக்கத்தில் ஜெயம் ரவி நடிக்கும் படம் “ஆதிபகவான்”. நீது சந்திரா ஜோடி. பாங்கொக்கில் படத்தின் பெரும்பகுதி படமாக்கப்பட்டுள்ளது. இந்தப் படத்துக்குப் பிறகு அறிமுக இயக்குனரின் இயக்கத்தில் ஜெயம் ரவி “பூலோகம்” என்ற படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டிருந்தார். ஜெயம் ரவிக்கு ஜோடியாக அமலா பால் ஒப்பந்தம் ஆகியிருந்தார். ஆனால் திடீரென இப்போது பட்த்திலிருந்து விலகிக் கொண்டார் அமலா. காரணம் கேட்டதற்கு, தனக்கு நாட்களை ஒதுக்க முடியாமற் போனதால் இந்த முடிவை எடுத்ததாகக் கூறியுள்ளார்.

## விண்ணிலிருந்து நோக்க



உலகின் மிகப்பெரிய தொலைநோக்குக் கருவியை விண்ணில் அமைப்பதற்காக ரஷ்யா ஒரு விண்கலத்தை அனுப்பி உள்ளது. இதில் ஒரு வினாடிக்கு 144 மெகாபைட்ஸ் வேகத்தில் தகவல்களைப் பெறலாம். இந்த விண்கலம் பூமிக்கு மேல் 10 ஆயிரம் கி.மீ. முதல் 3 இலட்சத்து 90 ஆயிரம் கி.மீ. வரை பறந்து செல்லும் திறன் கொண்டது.

ஜப்பானில் வறுமை, பட்டினியால் சாவு என்றெல்லாம் இப்போது செய்திகள் வருகின்றன. ஜப்பானின் எழுச்சியும், தேக்கமும், ஓரளவு வீழ்ச்சியும் பற்றி நிறைய கட்டுரைகள், புத்தகங்களெல்லாம் இன்று கிட்டுகின்றன. இவற்றில் சில ஜப்பானியரே எழுதியவை. கார்டியன் இதழில் ஒரு ஜப்பானிய ஆய்வாளர் ஃபுகுஷிமா அணு

# ஜப்பானில் வறுமை

உலை விபத்து குறித்தும் அதை ஜப்பானியர் எப்படி அணுகுகிறார்கள் என்பது குறித்தும் எழுதிய கட்டுரை வெளிவந்துள்ளது.

கார்டியன் ஓரளவு சிந்திக்கக் கூடிய பத்திரிகை என்பதால் இதில் உள்ள செய்தி நம்பகத் தன்மை உள்ளதென்று எடுத்துக் கொள்ளலாம். இதையே நியுயோர்க் ரைம்ஸ் போன்ற ஒரு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைக்கருவியான செய்தித்தாள் பிரசுரித்தால் எப்படி எடுத்துக் கொள்வதென்பதை நாம் வெகுவாக யோசிக்க வேண்டி இருக்கும்.

வறுமை நிலையில் உள்ள முதிய ஜப்பானியர் இன்றளவில் நிறைய என்றாலும், வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிட்டே இந்தக் கட்டுரை பேசுகிறது. ஜப்பானின் சமூகமும், அரசும், தனி மனிதர்களும் தம் நிலை குறித்து எப்படி யோசிக்கிறார்கள் என்பது சில வியப்புத் தகவல்களை நமக்குத் தருகிறது என்பது உண்மை.

கட்டுரையின் லிங்க் இதோ:
http://www.guardian.co.uk/world/2012/feb/24/family-die-starvation-japan

# வெங்காயம்

மாஸ் நடிகர்கள், திறமையான தொழில் நுட்பக் கலைஞர்கள் என்று எந்த எதிர்பார்ப்பையும் கிளறாத படம். ஆனால் படம் முடிந்த நொடியில் அத்தனை பேரும் ஒரே நேரத்தில் எழுந்து நின்று கைதட்டி பாராட்டியதுதான் இயக்குநருக்கு கிடைத்திருக்கும் நிஜமான கௌரவம்.



இப்படத்தின் குழுவினருக்கு தொழில் நேர்த்தி சுத்தமாக இல்லை. ஏனோதானோ வென்று தான் படமெடுக்கப்பட்டிருப்பதாக தோன்றுகிறது. பல நடிகர்களின் நடிப்பு சுமாருக்கும் கீழே. இசை, ஒளிப்பதிவு, எடிட்டிங், கிராபிக்ஸ் என்று எல்லாத் துறையிலும் படு மோசமான வேலை.

ஆனால் அத்தனையையும் அடித்து நொறுக்கி, படம் பார்ப்பவர்களை கவர்கிறது படததின் உள்ளடக்கம். இப்படியொரு படத்தை எடுத்தால், எந்தத் தயாரிப்பாளரும் அடுத்த படத்துக்கு அட்வான்ஸ் கொடுக்க வீட்டுப்படி ஏறிவரமாட்டார் என்று தெரிந்தும், தைரியமாக எடுத்திருக்கும் இயக்குநர் சங்ககிரி ராச்குமாரே ஒட்டு மொத்த பாராட்டுகளுக்கும் தகுதியானவர்.

இம்மாதிரியான பகுத்தறிவு முயற்சிகளுக்கு எப்போதும் தாமாகவே முன்வந்து ஆதரவு வழங்கும் நடிகர் சத்யராஜையும் பாராட்ட வேண்டும்.

ஜோதிடத்தை விஞ்ஞானம் என்று கதை கட்டி அப்பாவி மக்களை ஏமாற்றித் திரியும் ஆன்மீக பயங்கரவாதக் கூட்டத்தால் ஏற்படும் சமூக சீர்கேடுகளை, அவலங்களை, சுரண்டல்களை அப்பட்டமாக தோலுரித்துக் காட்டியிருக்கிறது இப்படம். "இனிமேலாவது திருந்துங்கடா" என்று பத்து வயதுப் பெண் இறுதிக்காட்சியில் தொண்டை வலிக்க கத்துவது ஏமாற்றி வயிறு வளர்க்கும் ஊளைச்சதைக் கும்பலை பார்த்து மட்டுமல்ல. மூளையை அடகு வைத்து.. வாழ்வை, குடும்பத்தை பணயம் வைக்கும் சாமானிய தமிழனையும் பார்த்துதான்.

"மூடநம்பிக்கை தானய்யா இந்த சமூகத்தின் நிஜமான பிரச்சினை" என்று ஆணியடித்தது போல அழுத்தம் திருத்தமாக படமெடுத்திருக்கும் படக்குழுவினரை வணங்குகிறோம்.

பகுத்தறிவுக் கருத்துகளை மக்கள் அனைவரும் உடனே ஏற்றுக்கொண்டுவிடுவர் என்று எதிர்பார்க்கவில்லை. குறைந்த படசம் மூடநம்பிக்கைகளில் உழனறு முட்டாளாக வாழ்க்கையைத் தொலைக்காமல் இருந்தால கூட போதுமே என்பதுதான் பகுத்தறிவு வாதிகளின் தற்போதைய ஆதங்கம்.

திராவிட இயக்கம் கலைத்துறையில் ஆரம்பத்தில் செய்து, பிற்பாடு செய்ய மறந்துவிட்ட கடமைகளை மிகச்சரியாக சுட்டிக் காட்டியிருக்கிறது இந்த வெங்காயம்.

நீங்கள் நாத்திகரோ, ஆத்திகரோ... யாராக இருந்தாலும கட்டாயம் பார்த்தே தீரவேண்டிய படம் இது.

- யுவகிருஷ்ணா

# Lose-Lose deal

ஐ.நா மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில் நடந்த வாக்கெடுப்பில், போரின்போது இலங்கை மனித உரிமைகளுக்கு எதிராக நடந்துகொண்டதாக கண்டித்து, அந்நாடு மேற்கொண்டு என்ன செய்யவேண்டும் என்று அமெரிக்கா கொண்டுவந்திருந்த தீர்மானத்தின்மீது வாக்கெடுப்பு நடைபெற்றது. பெரும்பான்மை நாடுகள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. சில நாடுகள் இந்தத் தீர்மானத்தை எதிர்த்தன.

இந்தியா முக்கியமாக இந்தத் தீர்மானத்தை ஆதரித்தது. பொதுவாக இந்தியா இலங்கையின் பக்கம் இருக்கும். ஆனால் இம்முறை தமிழகக் கட்சிகளின் இடைவிடாத நெருக்குதலால் இந்தியா வேறு வழியின்றி இலங்கைக்கு எதிராக வாக்களித்துள்ளது. ஆனால் தெளிவான ஒரு வெளியுறவுக் கொள்கை இல்லாத காரணத்தால் இந்த வாக்களிப்பால் இந்தியாவுக்கு எந்தவித நன்மையும் கிடைக்கப்போவதில்லை. அதே சமயம் இலங்கைத் தமிழர்களுக்கு எந்தவிதமான நன்மையும் கிடைக்கப்போவதில்லை.

திமுகவைத் திருப்திப்படுத்த என்று இந்த முடிவை மத்திய அரசு எடுத்துள்ளது. ஆனால் இதற்காக திமுகவைத் தவிர யாரும் அரசைப் பாராட்டப் போவதில்லை. இலங்கை கோபித்துக்கொண்டுவிடக் கூடாதே என்பதற்காக இந்திய வெளியுறவுத்துறை அவசர அவசரமாக வெளியிட்ட அறிக்கையைப் படிக்கும் எந்தத் தமிழுணர்வாளரும் இந்திய அரசை எப்போதும் திட்டுவதுபோலத் தொடர்ந்து திட்டுவார். அதே சமயம் அந்தக் கடிதத்தை சாதாரண சிங்களவர் யாரும் பார்க்கப் போவதே இல்லை. இலங்கை அரசோ, இந்தியா தன்னை முதுகில் குத்திவிட்டது என்று கோபத்தில் இருக்கும். எனவே இலங்கை அரசும் இலங்கையின் மக்களும் இந்தியாவை எதிரியாகப் பாவிப்பார்கள்.

இந்திய அரசு எந்தவிதமான முடிவையும் எடுத்திருக்கலாம். இலங்கையை ஆதரிப்பது என்ற முடிவை எடுக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அதனால் என்ன விளைவுகள் வந்தாலும் அதனை எதிர்கொள்வது என்று யோசித்திருக்க வேண்டும். உதாரணமாக தி.மு.க ஆட்சியிலிருந்து விலகினால் அதற்கு பதிலாக என்ன செய்வது என்பதை யோசித்திருக்க வேண்டும்.



மாறாக, நிஜமாகவே மனம் உறுத்தி, மனித உரிமையை முன்வைப்பதாக முடிவெடுத்தி ருக்கலாம். அப்படியென்றால், தெளிவாக, ஆணித்தரமாக தன் வழியைத் தான் மாற்றிக் கொள்வதாகச் சொல்லியிருக்கலாம். முதலில் நாட்டு மக்களிடம் தன் வழிமாற்றத்தைப் பற்றித் தெளிவாகச் சொல்லிவிட்டு, அதற்கு ஏற்றாற்போல மாறப்போகும் புவி அரசியல் விளையாட்டில் எப்படிக் காய் நகர்த்துவது என்பதைத் தெளிவாக யோசித்திருக்கலாம்.

இப்படி இதையும் செய்யாமல், அதையும் செய்யாமல், எல்லோருக்கும் முன் ஜோக்கராக நிற்பதே இந்த அரசுக்கு வாடிக்கை ஆகிவிட்டது.

– பத்ரி சேஷாத்ரி

# இளையராஜாவை எதிர்பார்த்து...



கவுதம் வாசுதேவ் மேனன் இயக்கும் படம், "நீதானே என் பொன்வசந்தம்". தமிழ், தெலுங்கில் உருவாகும் இந்தப் படத்தில் ஜீவா, சமந்தா ஜோடியாக நடிக்கின்றனர். படத்திற்கு இளையராஜா இசையமைக்கிறார். படத்தின் பாட்டுக்கு இப்போது இருந்தே பெரும் எதிர்ப்பார்ப்பு கிளம்பியுள்ளது. பாடல்களை இசையமைத்துவிட்ட இளையராஜா, அவற்றை லண்டனில் மாஸ்டரிங் செய்கிறார். அங்குள்ள ஏஞ்சல் ஸ்ருடியோவில், ஹங்கேரி இசைக் குழுவினருடன் இணைந்து படத்தின் பின்னணி இசைக் கோர்ப்புப் பணிகளையும் முடிக்கிறார். ராஜாவிடமிருந்து மீண்டும் பொன்வசந்த காலப் பாடல்களைக் கேட்கும் ஆர்வத்தில் ரசிகர்கள் காத்திருக்கிறார்கள்.

# மேற்குலகிடமா பிச்சையேந்துவது?



எமது புலம் பெயர்ந்த தமிழர்கள் மட்டும் மேற்குலகிடம் நீதி கேட்டு தொடர்ச்சியாக பிச்சைப் பாத்திரம் ஏந்தும் நிலைமையை நாம் என்னவென்று எடுத்துரைக்க! மேற்குலக அரசியல் அபிலாசைகளுக்கு உள்ளாகிப்போன பல்வேறுநாட்டு மக்கள் (ஈராக், லிபியா, ஈரான்) இங்கு ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இருந்தபோதும் அம்மக்கள் இவர்களிடமே நீதி, நியாயம் கேட்டு அலைவதில்லை. காரணம் தமது நாடுகளில் யுத்தங்களைத் தூண்டுபவர்களாகவும், பொருளாதார நெருக்கடிகளை விளைவிப்பவர்களாகவும் இருப்பவர்கள் இவர்கள்தான். அப்படியிருக்க இவர்களிடமே நீதியை எவ்வாறு எதிர்பார்ப்பது என்பதில் மிகுந்த அரசியல் தெளிவுள்ளவர்களாக அம்மக்கள் இருக்கின்றார்கள்.

இலங்கையில் சமாதானம், அமைதி நிலைபெறுவதை தடுப்பதற்காக மேற்குலகநாடுகள் மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் புலம்பெயர் தமிழர்கள் தொடர்ந்தும் துணைபோய்க் கொண்டிருக்கின்றார்கள். இச்செயலானது இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் இழைக்கும் மிகப்பெரிய வரலாற்றுக் குற்றமாகும் அல்லவா?

தமிழ் ஈழம் கேட்டு யுத்தத்தை தொடக்கிவிட்டு அனைத்து வசதிகளையும் கொண்ட நாடுகளில் பாதுகாப்பாக இருந்துகொண்டு தொடர்ந்தும் இலங்கைவாழ் மக்கள் மீது யுத்தத்தை திணிக்க முனைவது எந்தவகை நியாயம்?

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல் 30 வருட யுத்தத்தில் கால் இழந்து, கையை இழந்து, குடும்பத்தை இழந்து, சொத்தை இழந்து, சுகத்தை இழந்து, கல்வியை இழந்து, தொழிலை இழந்து இனி இழப்பதற்கு எதுவுமே அற்று கூனிக் குறுகி எந்த நம்பிக்கையும் அற்று வாழ்வதற்கு வழி தெரியாமல் தவிக்கின்ற அந்த மக்களுக்கு மீண்டும் ஒரு யுத்தத்தை பரிசாக கொடுக்க யார் முயற்சித்தாலும் அவர்கள் மனிதர்கள் எனும் தகுதிக்குரியவர்களாக இருக்கமுடியாது.

இலங்கையில் தமிழ்மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளும், விடுதலைப் புலிகளின் நேரடி வாரிசு எனக் கூறுபவர்களும் மேற்குலகிற்கு ஆதரவாக செயற்படாமல் ஐக்கிய நாடுகள் சபையை புறக்கணித்திருக்கின்றார்கள். ஆனால் தமிழ் நாட்டு சினிமாக்காரர்களான சீமானும், சத்தியராசும் புலம் பெயர் மக்களை உசுப்பிவிடுவது மிகவும் கோமாளித்தனமான ஒரு வேடிக்கையாக உள்ளது. அந்தச் சினிமாக்கார்களால் அங்குள்ள யதார்த்த நிலையை புரிந்துகொள்ள முடியாத அளவிற்கு "எதற்கோ" அடிமைப்பட்டு செயற்படுகின்றார்கள் என்பதுதான் உண்மை.

புலம் பெயர்ந்த தமிழ் பெருந்தகைகளே, உங்கள் இன உணர்வுகளை வெள்ளைக்காரனுக்கு விற்று பிழைப்பு நடத்தாமல் நொந்து நலிந்து போயுள்ள இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் வாழ்வின் மேம்பாட்டிற்காக முடிந்ததை செய்யுங்கள்.

தேவதாசன்.

# அமெரிக்கத் தீர்மானத்தை அமுல்படுத்த இலங்கையர் அனுமதிக்க மாட்டார்கள்

## இன்னும் தணியாத ஆவேசம்



(கொழும்பு)

ஜெனிவாவில் அமெரிக்கா பெற்ற வெற்றியை அமுல்படுத்த இலங்கை மக்கள் ஒரு போதும் இடமளிக்கமாட்டார்கள் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் வீடமைப்பு நிர்மாண பொறியியல் துறை அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கண்டி மத்திய சந்தைக்கு முன்பாக இடம்பெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

ஜெனிவாவில் வாக்களிப்பு முடிந்து விட்டது. ஆனால் இது இலங்கையில் நடக்கும் ஒரு சாதாரண தேர்தலல்ல. அது உலகில் மிகச் சிறிய நாடான எமது இலங்கையை எதிர்த்து உலகில் மிகப் பெரிய வல்லரசான அமெரிக்கா பெற்ற வாக்கு விகிதம் ஒப்பீட்டளவில் மிக குறைந்ததேயாகும்.

எமது நாட்டில் பலர் மது விற்பனைக்கான அனுமதிப் பத்திரத்தை பெற்றுள்ள போதும் அவர்கள் விரும்பிய இடங்களில் மது விற்பனைக் கடைகளைத் திறக்க பொதுமக்கள் அனுமதிப்பதில்லை.

அதுபோல் இன்று அமெரிக்கா உட்பட மேற்குலம் ஜெனிவாவில் பெற்ற அனுமதிப் பத்திரத்தை அமுல்படுத்த இலங்கை மக்களான நாம் ஒரு போதும் இடமளிக்கமாட்டோம்.

உலகிற்கே பயங்கரவாதத்தை கொண்டு சென்ற விடுதலைப் புலிகளுக்கு மீண்டும் உயிர் கொடுக்கும் ஒரு நடவடிக்கையையே இன்று அமெரிக்கா மேற்கொண்டுள்ளது.

அன்று ஒரு பிரபாகரனை உருவாக்கியது போல் அடுத்து ஒரு உருத்திரகுமாரனை உருவாக்கும் ஒரு நிகழ்ச்சி நிரல்தான் இது.

மூன்று தசாப்த காலம் நாம் இழந்திருந்த சுதந்திரத்தை மீண்டும் பெற்றுத்தந்த எமது யுத்த வீரர்களை உலக நீதிமன்றத்தின் முன்நிறுத்த இந்நாட்டு மக்கள் அனுமதிக்கப் போவதில்லை.

அதேபோல் இது காலவரை பயந்து பயந்து யுத்தம் செய்த நாட்டுத் தலைவர்களையும் விட தைரியமாக முன்னின்று நாட்டில் இரண்டாவது சுதந்திரத்தை பெற்றுத் தந்த தலைவரை ஏகாதிபத்தியவாதிகள் முன் கைக்கட்டி நிற்க அனுமதிப்பதா? இவை இரண்டையும் எம் நாட்டு மக்கள் அனுமதிக்கமாட்டார்கள்.

அமெரிக்காவின் தீர்மானம் நாட்டுக்கெதிரானதல்ல. அது அரசாங்கத்திற்கு எதிரானது என்று சிலர் கூறுவது போல அரசும் நாடும் வேறல்ல. இவை இரண்டும் ஒன்றே.

எனவே இது எம்மீது திணிக் கப்பட்டுள்ள ஒரு விடயம். சிறிய நாடான கியூபாவால் அமெரிக்காவை எதிர்த்து வாழ முடியுமாயின் ஏன் எம்மால் முடியாது?

இந்த நாட்டு முஸ்லிம்களை நான் பாராட்டுகிறேன். நாட்டிற்கு அபகீர்த்தி ஏற்பட்ட போது, முழு முஸ்லிம் சமூகமும் ஒரு தலைப்பட்ச கருத்தில் எதுவித சலனமுமின்றி அமெரிக்காவின் தீமானத்திற்கு எதிர்பபு தெரிவித்தனர் என்றார்.

# முஸ்லிம் குழுக்கள் மோதல்; பத்துப் பேருக்கு அவசர சிகிச்சை

(பொலநறுவை)

பொலனறுவை - வெலிக் கந்தை கடுவன்வெல என்ற முஸ்லிம் கிராமத்தில் நடந்த சமய நிகழ்ச்சி ஒன்றின் போது இடம்பெற்ற மோதல்களில் 10 பேர் காயமடைந்துள்ளனர். 14 வாகனங்களும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

அம்பாறை - கல்முனையி லிருந்து வந்த குழுவினருக்கும், உள்ளூர்வாசிகளுக்கும் இடை யில் இந்த மோதல் இடம் பெற்றுள்ளதாக வெலிக்கந்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் வெலிக் கந்தை வைத்தியசாலையில் அவசர சிகிச்சையை மேற் கொண்ட பின்னர் கல்முனைக் குத் திரும்பி விட்டனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

7வான்கள், 6 முச்சக்கரவண்டி கள், ஒரு மினிபஸ் என்பன சேதமடைந்துள்ளன.

# இலங்கையின் மத்தியஸ்தம் மாலைதீவுக்குத் தேவை

(கொழும்பு)

மாலைதீவில் தற்போது நில வும் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இலங்கை யின் மத்தியஸ்தத்தை வர வேற்பதாக மாலைதீவின் முன் னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள உயர்மட்ட குழுவினரிடம் கலந்துரையாடு வதற்காக நஷீட் கொழும்புக்கு வருகைத்தந்திருந்தார். மாலை தீவின் முன்னாள் ஜனாதிபதி முஸ்லிம் அரசியல்வாதிகளுட னும் நேற்று முன்தினம் கலந்து ரையாடினார்.

சிறிலங்கா முஸ்லிம் காங் கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஷபீக் ரஜாப்தின் மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப் பின் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் அசாத் சாலி உட்பட பல்வேறு முக்கிய அரசியல்வா திகளை நஷீட் சந்தித்துள்ளார்.

# அமெரிக்க தூதுக்குழு இன்று கொழும்புக்கு

அமெரிக்காவின் மூவர் அடங்கிய உயர்மட்டத் தூதுக்குழு ஒன்று இன்று கொழும்புக்கு வரவுள்ளது. இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ஜெனிவா அமர்வில் வெற்றி பெற்ற நிலையில் இவ்விஜயம் இடம்பெறவுள்ளது.

கொழும்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் உட்பட பல அரசியல் கட்சிப் பிரமுகர்களை இக்குழு சந்திக்கும் என்று இராஜதந்திர வட்டாரத் தகவல்கள் தெரிவிக் கின்றன

# பெண்கள் பிடித்த புகைப்படங்கள் கொழும்பில் கண்காட்சி

(கொழும்பு)

பெண்களின் புகைப்பட கண் காட்சி 2012 கொழும்பு லயனல் வென்ட் கலையரங்கில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பமாகியது. பெண் கள் மற்றும் ஊடக கூட்டமைப் பின் ஏற்பாட் டில் நடைபெறும் இப்புகைப்பட இக்கண்காட்சி இன்று ஞாயிற் றுக்கிழமை வரை நீடிக்கும். காலை 9 மணி முதல் மாலை 6.00 மணிவரை இக்கண்காட் சியை பொதுமக் கள் பார்வையிட முடியும்.

கஸாலா அன்வர், தேஹானி ஆரியரட்ன, அஸ்ரா, அப்துல் காதர், வேலாயுதன் ஜயசித்ரா, துஷியந்தினி கனகசபாபதிபிள் ளை, ருஷ்தா மொஹினுதீன், ஆமினா நிஸார், தாட்ஷாயினி புஷ்பநாதன், பூங்கோதை ரட்ண வேல், தனுஜா துரைராஜா, அன்யா குக், இசுரி தயாரட்ன, நதாலி தேவின்கா, சத்துரி திஸா நாயக்க, நிஹார பெர்னாண் டோ, அஞ்சலி கமகே, இந்திர கொன்சல்கோரள, சமி குண சேகர, சர்மளி ஜயசிங்க, பியூமிகா பத்திரண, நிரோஷினி பெரேரா, பூர்ணிமா பெரேரா, சச்சினி பெரேரா, ஷிபானி ரிபாய், ருஷிகா சில்வா, நடாலி சொய்ஸா, கரில் டோஸர் பெரேரா, ரொஷாந்தினி வீரவர் தன, பாக்யா மந்தாகினி விக் கிரமகே, நயன்தாரா விஜே வர்தன, சாந்தனி வனிகதுங்க ஆகிய புகைப்படவியலாளர்கள் பிடித்த புகழ்மிக்க புகைப்படங் கள் கண்காட்சியில் இடம்பெற் றுள்ளன.

## கிராமம் தோறும் வேலைத் திட்டம்

(கொழும்பு)

"கிராமத்துக்கு ஒரு வேலை" தேசிய அபிவிருத்தித் திட்டம் நேற்று முன்தினம் களுத்துறை மாவட்டத்தில் உள்ள பண்டா ரகம கிராமத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் ஆரம் பித்து வைக்கப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினூடாக இத்திட்டம் நாட்டில் உள்ள 14019 கிராம சேவகர்கள் பிரிவில் நடை முறைப்படுத்தப்படவுள்ளது. ஒரு கிராமத்துக்கு ஒரு மில்லி யன் ரூபா வீதம் மொத்தம் 14019 மில்லியன் ரூபா இத்திட் டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

# அரசுமீது அழுத்தம் பிரயோகிக்க எந்த நாட்டுக்கும் அனுமதியில்லை

எந்தவொரு நாட்டிற்கும் எவ்வித காரணங்களின் அடிப்படையிலும் இலங்கை மீது அழுத்தம் பிரயோகிக்க இடமளிக்கப்பட மாட்டாது என பதில் வெளிவிவகார அமைச்சர் டியூ குணசேகர தெரிவித் துள்ளார்.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக கொண்டுவரப்பட்ட பிரேரணை நிறைவேற்றப்பட்டமை குறித்து விசேட உரையொன்றை ஆற்றியபோதே அமைச்சர் இந்தக் கருத்தினை வெளியிட்டுள்ளார்.

பிரேரணைக்கு எதிராக வாக்களித்த மற்றும் வாக்களிப்பில் கலந்துகொள்ளாத அனைத்து நாடுகளுக்கும் அமைச்சர் நன்றி தெரிவித்துள்ளார்.

இந்த வரலாற்று ரீதியிலான சந்தர்ப்பத்தில் அனைத்து நாடாளு மன்ற உறுப்பினர்களும் ஒற்று மையுணர்வுடன் செயற்படு வார்கள் என்று தாம் நம்புவதாக குறிப்பிட்டுள்ள அவர், சர்வதேச சமூகத்தின் உதவியை இலங் கை தொடர்ந்தும் எதிர்ப்பார்ப்ப தாக தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் ஜெனிவா பிரேரணையின்போது இலங் கைக்கு ஆதரவு தெரிவிக்க வில்லை என்ற காரணத்தின் அடிப்படையில் அந்த நாடுக ளுடன் இராஜதந்திர உறவுகளில் பாதிப்பு ஏற்பட மாட்டாது என வும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த நாடுகளுடனான நட்புற வை தொடர்ந்தும் பேணுவதற் குரிய கதவுகள் திறந்தேகாணப படுவதாகவும் அமைச்சர் குறிப் பிட்டுள்ளார். பயங்கரவாதம் புரையோடிப்போய் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருந்த நாடு மீண்டும் அந்த நிலைக்கு தள்ளப்படுவதற்கு இடமளிக் கப்பட மாட்டாது எனவும் பதில் வெளிவிவகார அமைச்சர் டியூ குணசேககர தெரிவித்துள்ளார்.

# சவுதிச் சிறைக்கூடத்தில் இலங்கைப் பெண்கள்

## மீட்டெடுக்க முயற்சி

சவுதி அரேபியாவிற்கு வேலை வாய்ப்பினைப் பெற்று சென்ற இலங்கையைச் சேர்ந்த 92 பேர் தற்போது அனாதரவான நிலை யில், சவுதி அரேபிய சிறை யில் அடைக்கப்பட் டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

பணிப்பெண்களாகச் சென்ற இவர்கள் வேலை வழங்குந ரால் பல்வேறு துன்புறுத்தலுக்கு உள்ளான நிலையில், தற்போது சிறையிலடைக்கப்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அதேவேளை, இந்த விடயம் குறித்து வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தகவல் தெரிவிக்கையில்,

சவுதி அரேபியாவில், சட்ட விரோதமாக தங்கியுள்ள இந்த இலங்கைப் பணிப்பெண்கள் இவ்வாறு சிறையில் அடைக்கப் பட்டுள்ளதாக பணியகத்தின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

இவர்களை இலங்கைக்கு மீட்டு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளில் சவுதி அரே பியாவில் உள்ள இலங்கைத் தூதுவராலயம் ஈடுபட்டு வருவ தாகவும் பணியகத்தின் பேச் சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.





முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி கொழும்பில் சர்வ மத நல்லிணக்க செயலமர்வொன்றை நடாத்தியது. நிகழ்வில்,முன்னணியின் தலைவி தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில் உரையாற்றுவதையும், வளவாளர்கள், பங்குபற்றுநர்கள் அமர்ந்திருப்பதையும் அம்பாறை பிரதிநிதி டாக்டர் எம்.ஜ.எம்.ஜெமீல் மட்டக்களப்பு பிரதிநிதி அருட்தந்தை பிரேய்னர் ஆகியோர் கருத்தாடல் செய்வதையும் படங்களில் காணலாம்.

# பனைசார் கைப்பணி செய்யும் பெண்கள் கை நிறைந்த வருமானம் பெறுகின்றனர்

## பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பெருமிதம்

(மன்னார்)

பனைசார் கைப்பணிப்பயிற்சியை பூர்த்தி செய்த பெண்கள் மாதாந்தம் 18 ஆயிரம் ரூபா வருமானம் பெற்றுவருவது பெரும் மகிழ்ச்சியளிக்கின்றது என பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்துள்ளார்.

மன்னார் - சாவற்கட்டுப் பகுதியில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள பனை அபிவிருத்திச் சபையினால் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் யுவதிகள், பெண்களுக்கான பனைசார் கைவினைப் பொருள் உற்பத்திப் பயிற்சி நிலையம் கடந்த 22 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வருடாவருடம் பனை அபிவிருத்திச் சபையினால் மாவட்டங்கள் தோறும் பனைசார் கைப்பணிப் பயிற்சி நிலையங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. எனினும் சில பயிற்சி நிலையங்களில் பொழுதுபோக்காக பயிற்சி நெறிகளில் கலந்து கொள்ளும் போக்கே காணப்பட்டது.

ஆனால் இதற்கு மாறாக அண்மையில் ஒரு பத்திரிகையில் வெளிவந்த செய்தி ஒன்று எனது கவனத்தைக் கவர்ந்தது. புதிதாக மீளக்குடியேற்றப்பட்ட பூநகரிப் பகுதியில் உள்ள கௌதாரி முனைப் பகுதி மக்கள் தாம் மீளக்குடியேற்றப்பட்டபோதிலும் தமக்கான தொழில் வாய்ப்புக்களுக்கு எந்தவித நிறுவனங்களும் உதவ முன்வரவில்லை என அச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனை அடுத்து நாம் அப்பகுதிக்கு நேரில் விஜயம் செய்து, மிகவிரைவாக பனைசார் உற்பத்திப் பயிற்சி நெறி ஒன்றை ஆரம்பித்தோம். ஆரம்பிக்கப்பட்டு சுமார் இருவாரங்களின் பின் அப்பகுதிக்கு சென்றபோது, பயிற்சியில் கலந்துகொண்ட பெண்கள் 2 நாட்களில் 3 கைப்பைகள் உற்பத்தி செய்வதையும், ஒரு கைப்பை 400 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதையும் என்னால் அவதானிக்க முடிந்தது.

இதிலிருந்து மாதமொன்றுக்கு அவர்கள் 18,000 ரூபா வரையில் வருமானம் ஈட்டுவதையிட்டு பெருமகிழ்ச்சி கொள்ளத்தக்கதாய் இருந்தது. அதே போல் நீங்களும் சிறந்த உற்பத்தியாளர்களாக உருவாக வேண்டும் என்றார்.

## ஆன்மீக நிகழ்வு

(வடமராட்சி)

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந் திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றது.

அதன் பிரகாரம் இன்று ஆலய சுற்றுப்பூசைகள் நிறைவு பெற்றதும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் காலை 10.30 மணிக்கு பருத்தித்துறை சத்திய சாயிபாபா நிலையத்தினரின் பஜனையும் மதியம் ஆச்சிரம மண்டபத்தில் அடியார்களுக்கு அன்னதான நிகழ்வும் இடம்பெறும் என மடாதிபதி க.ஆனந்தராஜா தெரிவித்துள்ளார். (116)

## உழவர் சங்கங்களுக்கு நிவாரணம்


(கொழும்பு)



மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சமாதி சமூக அபிவிருத்திச் சங்கத்தின் பணிப்பாளர் புத்திக பத்திரண அவர்களால் சிங்கள, தமிழ், முஸ்லிம் உழவர் மக்களுக்கான விவசாய உபகரணங்களை வழங்கும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இந்தப் பிரதேச வாழ் சிங்கள, தமிழ், முஸ்லிம் உழவர் மக்களுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கும் வைபவம் கடந்த வாரம் மாத்தறை மாவட்டத்தின் அதுருலிய பிரதேச செயலாளர் பிரிவில் நடைபெற்றதுடன், விவசாயிகளுக்கு அந்த உபகரணங்களைக் கையளிப்பதை படத்தில் காணலாம்.

## மின்தடை பற்றிய தகவல்



(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டியிருப்பதால் நாளை திங்கட்கிழமை 28.03.2012 புதன்கிழமை 30.03.2012, வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை இணுவில், உப்புமடம், கோண்டாவில், சுதுமலை, புன்னாலைக் கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் - 27.03.2012 செவ்வாய்க் கிழமை, 29.03.2012 வியாழக் கிழமை, 31.03.2012 சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, மடமாவடிப் பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப் பிரதேசம், ஆடியபாதம் வீதி, கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும், 01.04.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை கச்சேரிப் பிரதேசம், அரியாலைப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்சாரசபை அறிவித்துள்ளது.

## மகளிர்தின நிகழ்வு

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துடன் சண்டிலிப்பாய் பிரதேச கிராம அபிவிருத்திச் சங்க சமாசம், மகளிர் விவகார அமைச்சு, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டம் ஆகியன இணைந்து நடத்தும் மகளிர் தின நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ். முரளிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர் திருமதி அ.ந. ஜெயராஜன், யு.என்.டி.பி. நிறுவன பணிப்பாளர் சி. ஞானகணேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (104)

## கசிப்பு உற்பத்தி; இருவருக்கு அபராதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 2 நபர்களுக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தால் 40 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தர்மபுரம் பகுதியில் 5 போத்தல் கசிப்புடன் கைது செய்த நபரும், பல்லவராயன்கட்டுப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் விற்பனை செய்த நபரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் கடந்த வியாழக்கிழமை ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி தர்மபுரம் வாசிக்கு 30 ஆயிரம் ரூபாவும் அபராதமும் செலுத்தத்தவறின் 4 மாத சாதாரண சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறு தீர்ப்பளித்தார்.

மேலும் பல்லவராயன்கட்டு வாசிக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு தீர்ப்பளித்தார். (கே)

## தமிழருக்கு நீதி வேண்டும் இதுவே இந்தியாவின் விருப்பம்

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தனது நிலைப்பாட்டிற்கு இணங்கியே இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்தது எனவும் இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதற்காக கரிசனைகள் வெளிப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டுமென விரும்பிய தாகவும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

இலங்கையின் இறைமையை இந்தியா மீற விரும்பவில்லை எனவும் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவின் தீர்மானத்திற்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தது ஏன் என செய்தியாளர்கள் வினாவியமைக்குப் பதிலளிக்கும் போதே இந்தியப் பிரதமர் இவ்வாறு கூறினார்.

சாதக பாதகங்களைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். நாம் செய்தது இலங்கை தொடர்பான எமது நிலைப்பாட்டிற்கிணங்கியதே. இலங்கையின் இறைமையை மீற நாம் விரும்பவில்லை.

ஆனால் கரிசனைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். அதனால தமிழ் மக்கள் நீதியையும் கௌரவமான வாழ்க்கையையும் அடைய முடியும் என அவர் தெரிவித்தார்.

## பயிற்சியின் போது மாணவருக்கு உபாதை

பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிகளின்போது 553 மாணவ, மாணவியர் உபாதைகளுக்கு உள்ளானதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதில் இருவர் எலும்பு முறிவினால் பாதிக்கப்பட்டதாகவும் எனினும், தலைமைத்துவ பயிற்சிகளின் போது எந்தவொரு மாணவனோ மாணவியோ உயிரிழக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்கள் போதைப் பொருட்களைப் பயன்படுத்துவதனை தடுக்கும் நோக்கில் தலைமைத்துவப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

போதைப்பொருள், பாலி மற்றும் பௌத்த பல்கலைக்கழகங்களுக்கு அருகாமையில் கஞ்சா விற்பனை செய்யப்பட்டு வந்ததாகவும், அந்த நடவடிக்கைகள் தடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

## செயலமர்வு

(துணுக்காய்)

துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் க.பொ.த (உயர்தரம்) வகுப்பில் இந்து நாகரிகம் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு ஒன்று நாளை திங்கட்கிழமை மாங்குளம் ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெற உள்ளதாக துணுக்காய் கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி வெ.மாலினி அறிவித்துள்ளார். (42)

## விலங்கு பரிபாலனம்; டிப்ளோமா கற்கை

(வடமராட்சி)

வடமாராட்சி கால்நடை வைத்திய அதிகாரிகள் பணிமனையினூடாக விலங்கு பரிபாலன டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

மேற்படி பயிற்சியானது இரண்டு வருடங்களைக் கொண்டதாகும். தகைமையாக க.பொ.த. உயர்தர பாடத்தில் விஞ்ஞானப் பிரிவில் மூன்று பாடம் சித்தி அல்லது விவசாயம் உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

இக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவுடன் வேலைவாய்ப்பு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறை கால்நடை வைத்திய நிலையத்தில் மேலதிக விபரங்களையும், விண்ணப்பப்படிவங்களையும் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (116)



யுத்தத்தால் பாதிக்கப்பட்டு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வரும் மாணவர்களுக்கு வடக்கு மாகாண சபையினால் அவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் உதவித் தொகை வழங்கப்பட்டது. நேற்று முன்தினம் ஆளுநரின் செயலகத்தில் வைத்து, பல்கலைக்கழகத்தின் தெரிவுக்குழுவின் சிபார்சின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 200 மாணவர்களுக்கு இந்த நிதி வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, செயலர் இளங்கோவன், யுனிசெப் பிரதிநிதிகள் மற்றும் வடமாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# சச்சின், ராவிட் சிறந்த மனிதர்கள்

(புதுடில்லி)

இந்தியாவின் சச்சின், ராவிட் சிறந்த வீரர்களாக மட்டுமல்லாமல், சிறந்த மனிதர்களாகவும் ஜொலிக்கின்றனர் என அவுஸ்ரேலிய வேகப்பந்துவீச்சாளர் பிரட் லீ புகழாரம் சூட்டியுள்ளார்.

சமீபத்தில், இந்திய கிரிக்கெட் வரலாற்றில், இரண்டு முக்கியமான சம்பவங்கள் அரங்கேறின. ஒன்று, 16 ஆண்டுகளாக இந்திய அணிக்காக விளையாடிய அனுபவ வீரர் டிராவிட், சர்வதேச போட்டியீல் இருந்து ஓய்வை அறிவித்தது. மற்றொன்று, சச்சின் வங்கதேசத்துக்கு எதிராக 100ஆவது சர்வதேச சதத்தை அடித்தது.

இவர்கள் இருவரும் சிறந்த வீரர்கள் மட்டுமல்ல, சிறந்த மனிதர்கள். இதில் அனுபவ வீரர் டிராவிட் ஓய்வை அறிவித்தது ரசிகர்களுக்கு வருத்தம் அளித்திருக்கும். வரும் காலத்தில் இவருக்கு எதிராக பந்து வீச முடியாமல் போனது ஏமாற்றம் அளிக்கிறது.சர்வதேச அரங்கில் 100ஆவது சதம் என்பது எளிதான காரியமல்ல. இதற்கு கடுமையாகப் போராட வேண்டும். இந்திய அணிக்காக விளையாடி வரும் சச்சின், கிரிக்கெட்டுக்கு கிடைத்த பொக்கிஷம். சர்வதேச அரங்கில் பல்வேறு சாதனைகள் படைத்த சச்சின், டிராவிட் ஆகியோருக்கு எதிராக விளையாடியதை, எனது கிரிக்கெட் வாழ்வின் சிறந்த தருணம் எனவும் அவர் தெரிவித்தார்.

# குறிவைக்கும் பொண்டிங்

(சிட்னி)

2013ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் இங்கிலாந்துடனான ஆஷஸ் தொடரில் கடைசி முறையாக விளையாடத் திட்டமிட்டிருப்பதாக அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துடனான ஆஷஸ் தொடரில் அதிக ஓட்டங்களைக் குவிக்க வேண்டும் என விரும்புகின்றேன். இதற்காக கடுமையான பயிற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றேன். இனிவரும் காலங்களில் கவுண்டி கிளப் போட்டிகளில் விளையாடப் போவதில்லை.

இந்திய அணியுடனான டெஸ்ட் தொடர் எனக்கு நம்பிக்கைத் தந்ததுடன் தெரிவுக்குழுவிற்கும் என் மீதான நம்பிக்கை அதிகரிக்கச் செய்தது. எனவே, 2013 அதிக ஓட்டங்கள் பெற முயற்சிப்பேன்.

சாதனைக்காகக் காத்திருப்பதாக சிலர் கருதுகின்றனர். அது தவறு. கிரிக்கெட்டை இன்று வரை நான் ரசித்தே ஆடி வருகின்றேன். அதன் மூலமே இந்த இடத்தை நான் அடைய முடிந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# போலாட் அதிரடி மே.தீவுகள் வெற்றி

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான நான்காவது ஒரு நாள் போட்டியில் 42 ஓட்டங்களால் மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றிபெற்றுள்ளது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் நான்காவது போட்டி நேற்று முன்தினம் சென். லூசியாவில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் ஏழு விக்கெட் இழப்பிற்கு 294 ஓட்டங்களைப் பெற்றது.

மேற்கிந்திய தீவுகள் அணி ஒரு கட்டத்தில் 146 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்களை இழந்து இக்கட்டை எதிர்நோக்கியிருந்தது.

எனினும் ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த கிரோன் பொலாட் மற்றும் அன்று ரசல் ஜோடி 94 ஓட்டங்களைப் பகிர்ந்து, அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தியது. அதிரடியாக துடுப்பெடுத்தாடிய கிரோன் பொலாட் 70 பந்துகளில் 8 ஆறு ஓட்டங்கள், ஐந்து நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 102 ஓட்டங்களையும், அட்ரியன் பரத் 41 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பிரட் லீ, சேவியர் டோஹட்டி வட்சன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பதிலுக்கு 295 ஓட்டங்கள் என்ற வெற்றி யிலக்கை நோக்கி ஆடிய அவுஸ்ரேலிய அணி 46.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 252 ஓட்டங்களைப் பெற்று தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் பிரட் லீ 48 பந்துகளில் 59 ஓட்டங்களைப் பெற்றதுடன், டேவிட் ஹசி 57 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் கெமரூச், டுவைன் பிரவோ, டரன் சமி, அன்ரு ரசல் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். போட்டியின் சிறப்பாட்டக்காரராக மேற்கிந்திய தீவுகள் அணி வீரர் கிரோன் பொலாட் தெரிவுசெய்யப்பட்டார்.



# 2ஆம் நாள் ஆட்டமும் மழையால் பாதிப்பு

(வெலிங்டன்)

தென்னாபிரிக்க, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டமும் மழை காரணமாகத் தடைப்பட்டது.

முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தைத் தென்னாபிரிக்க அணி தொடர்ந்தது.

சிறப்பான முறையில் பீற்றர்சன், டுமினி இணைந்து ஆடி நியூசிலாந்து பந்து வீச்சாளர்களைத் திறணடித்தனர்.

எனினும் நேற்றைய ஆட்டம் மழை காரணமாக கைவிடப்பட்ட வேளை தென்னாபிரிக்க அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 246 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் பீற்றர்சன் 96 ஓட்டங்களையும், டுமினி 76 ஓட்டஙகளையும் பெற்று ஆட்டமிழக்காதுள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

முதல் நாள் ஆட்டமும் மழை காரணமாக தடைப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இரு அணிகளுக்குமிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் தென்னாபிரிக்க அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# என்றென்றும் நினைவிருக்கும்

ஆசியக் கிண்ணத்தை பாகிஸ்தான் வென்றுவிட்டது. 2000ஆம் ஆண்டுக்குப் பின்னர் 2012இல் இரண்டாவது முறையாகக் கிண்ணம் வெல்கிறது பாகிஸ்தான்.

முதன் முறையாக இறுதிப் போட்டியில் பங்குகொண்ட பங்களா தேஷ் சகல தரப்பின் பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்ட நிலையிலேயே மயிரிழையில் கிண்ணத்தைத் தவற விட்டது.

பங்களாதேஷ் தொடரின் ஆரம்பத்தில் இருந்தே பரபரப்பான அணியாகவே செயற்பட்டு வந்தது. ஏன் ஒரு சந்தர்ப்பத்தில் கிண்ணம் இவர்களுக்குத்தான் என்ற நிலை கூடக் காணப்பட்டது. ஆனால், பாகிஸ்தான் அணியிடம் எக்காலமும் காணப்படுகின்ற போராடும் குணமே வெற்றி அவர்கள் பக்கம் செல்லக் காரணமாயிற்று.

முதலில் களத்தடுப்பில் ஈடுபட்ட பங்களாதேஷின் சிறப்பான ஆட்டத்தால் பாகிஸ்தான் ஓட்டங்கள் சேர்க்க மிகவும் கஷ்டப்பட்டது. கிடுக்கிப்பிடிக்குள் அகபபட்ட பாகிஸ்தான் அணியை மீட்டெடுத்தவர் என்றால் அது அப்ரிடிதான். அவர்தான் அணியின் இறுக்கத்தைத் தளர்த்தி ஓரளவிற்கு கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற உந்துதலாக இருந்தவர். அதேவேளை, சதாம் ஹொசைன் இறுதி ஓவரில் வாரி வழங்கிய 19 ஓட்டங்கள் பாகிஸ்தானுக்கு கிடைத்த போனஸ் ஓட்டங்கள்தான். இதுதவிர பங்களாதேஷ் வெற்றியடையும் சந்தர்ப்பங்கள் அதிகமாக இருந்தபோதும் நஜுமுதீன், நஸீர் உசெய்ன் இருவரதும் மிக மந்தமான ஆட்டம் வெற்றியில் இருந்து பங்களாதேஷ் அணியைத் தூர விலக்கி விட்டது என்பதே உண்மை. அதேவேளை, சாகிப் அல் ஹசன் தடையை உடைத்து ரண் குவித்தாலும் மற்றவர்களைக் கட்டிப்போட்ட பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களின் திறமையைக் குறைத்து மதிப்பிட முடியாது.

அதுவும் கிண்ணம் கைதவறிப் போகும் நிலையில் இறுதி ஓவரைக் கொடுத்த அணித் தலைவர் மிஸ்பா மிகச் சிறந்ததொரு அணித் தலைவர்தான். பங்களாதேஷ் அணியின் கிண்ணத்தைத் தட்டிப் பறித்தவர் அந்த இறுதி ஆறு பந்துகளை வீசிய சீமாதான்.

எது எவ்வாறாயினும் ஆட்டம் முடிவடைந்ததும் ஆட்டத்தின் கலந்துரையாடல் மற்றும் நேர்முக வர்ணணைக் குழுவினரான ரமீஸ்ராஜா, சஞ்சய் மஞ்சரோக்கர், வக்கார்யூனுஸ் ஆகி யோர் பங்களாதேஷ் அணியின் திறமைக்கே முதலிடம் கொடுத்து பாராட்டு மழையைப் பொழிந்தனர்.

ஆசியக் கிண்ணப் போட்டிகளைத் தொடர்ந்து பார்த்து வந்தவர்களுக்கு அந்தப் பாராட்டுக் கருத்துக்கள் மிகச் சரியானவை என்பது புரியும்.

ஏனெனில், தாங்கள் சளைத்தவர்கள் அல்ல. சர்வதேச கிரிக்கெட்டின் புதியதொரு சக்தியாக எங்களைப் பதிவு செய்கிறோம் என்று பங்களாதேஷ் வீரர்கள் நிச்சயமாக நிரூபித்திருக்கிறார்கள்.

ஆசியாவின் மூன்று ஜாம்பவான்களுடன் பங்களாதேஷ் மோதுகின்றது என்ற கருத்தை மாற்றி, ஆசியாவின் நான்கு ஜாம்பவான்கள் மோதிய ஆசியக் கிண்ணப் போட்டிகள் என்ற ஒரு நிலையை பங்களாதேஷ் உருவாக்கி விட்டது.

2012ஆம் வருட ஆசியக் கிண்ணப் போட்டிகள் நிச்சயமாக பங்களாதேஷ் அணியால் என்றும் மறக்க முடியாத உன்னதமான சுற்றுப் போட்டியாக இருக்கும். அதுவே எதிர்காலச் சாதனைகளுக்கும் கால்கோளாக இருக்கும்.




ஜோசப் கிருஸ்ணா





வலிகாமம் வலய மட்ட ரீதியில் பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் 15 வயதுப் பிரிவில் முதலிடம் பெற்ற அராலி சரஸ்வதி வித்தியாலய அணியையும், இரண்டாமிடத்தைப் பெற்ற பொன்னாலை வரதாராஜப் பெருமாள் வித்தியாலய அணியையும் காணலாம். இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (படப்பிடிப்பு : தயாளபாலன்)

## இன்றைய ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகள் கரப்பந்தாட்ட அரையிறுதிப் போட்டிகள் இன்றைய தினம் காலை 8.30 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வயது அடிப்படையில் நடைபெறும் இப்போட்டித் தொடரில், 15, 17, 19 வயதுப் பிரிவு ஆண், பெண்கள் அணியினர் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பிற்பகல் 2.00 மணிக்கு மூன்றாமிடத்திற்கான போட்டியும், இறுதிப் போட்டிகளும் இடம்பெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.(93)

## சிறந்த தடகள வீரர்களாக சென். ஜோன்ஸில் ஐவர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஐந்து பேர் சிறந்த தடகள வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற இப்போட்டியில் 13 வயதுப் பிரிவு 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் எம். தனுசன், 15 வயது பிரிவு நீளம் பாய்தலில் எல். அரவிந்தன், அதே வயதுப் பிரிவில் 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் கோல்ட் சயன், 17 வயதுப் பிரிவில் 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஏ. நிலோசன், 19 வயதுப் பிரிவில் எஸ். பெசின் அன்ருக் ஆகியோரே சிறந்த தடகள வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் இப்போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி 24 முதலாமிடத்தையும், 16 இரண்டாமிடத்தையும், 18 மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## தென்மராட்சி கரப்பந்தாட்டம் ஐங்கரன் அணி சம்பியன்

(மட்டுவில்)

தென்மராட்சிப் பிரதேச மட்ட ரீதியாக நடத்தப்பட்ட சிங்கர் வெற்றிக் கிண்ண கரப்பந்தாட்டத் தொடரில் ஐங்கரன் அணி சம்பியனானது.

தென்மராட்சி பிரதேச மட்ட ரீதியாக மின்னொளியில் நடத்தப்பட்ட இப்போட்டித் தொடரில் பல அணிகள் பங்குபற்றின. இப்போட்டிகள் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

கடந்த 22ஆம் திகதி நடைபெற்ற இறுதிப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் அணியும், மட்டுவில் ஐங்கரன் அணியும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் இரசிகர்களின் ஆவலை ஏற்படுத்தும் வகையில் ஆடியிருந்தனர்.

பரபரப்பான இப்போட்டியில் 3-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்ற மட்டுவில் ஐங்கரன் அணி தென்மராட்சி பிரதேச மட்ட சம்பியனாகத் தெரிவானது.

மின்னொளியில் இப்போட்டி நடைபெற்றமையால் அதிகளவான இரசிகர்கள் போட்டியைக் கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது. (118,93)

## பூநகரி கோட்ட மட்ட மெய்வல்லுநர் சம்பியன்கள்

(பூநகரி)

பூநகரி கோட்ட மட்ட ரீதியாக நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் சிறப்பாகச் செயற்பட்டு சம்பியனான வீர, வீராங்கனைகளின் பெயர் விபரம் பூநகரி கோட்டக் கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டது.

இக்கோட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டி கடந்த 13,14,15ஆம் திகதிகளில் முழங்காவில் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இதில் மூன்று பிரிவுகளில் முதலிடம் பெற்று சம்பியன் பட்டம் வென்ற வீர, வீராங்கனைகளின் விபரம் வருமாறு:

11 வயதுப் பிரிவின் கீழ் ஆண்கள் பிரிவில் ச. றதீஸ் (கிளி. பரமன்கிராய் ஜி.ரி.எம்.எஸ்., 11 வயது பெண்கள் பிரவில் சி. ஜெதீஸா (கிளி. கரியாலைநாகபடுவான் இல:2, 13 வயது ஆண்கள் பிரிவில் ஏ. அரவிந்தன் (கிளி. வேரவில் இந்து ம.வி.), 13 வயது பெண்கள் பிரிவில் து. நிதர்சிகா (கிளி. கிராஞ்சி ஜி.ரி.எம்.எஸ்.), 15 வயது ஆண்கள் பிரிவில் யூ. பவியரசன் (கிளி. ஜெயபுரம் ம.வி) மற்றும் பி. கஜீபன் (கிளி. கிராஞ்சி ஜி.ரி.எம்.எஸ்.) 15 வயது பெண்கள் பிரிவில் சி. சர்மிளா (கிளி. கறுக்காய்தீவு ம.வி.), 17 வயது ஆண்கள் பிரிவில் கு. தமிழ்மாறன் (கிளி. வேரவில் இந்து ம.வி, த. சதுர்சன் (கிளி. வேரவில் இந்து ம.வி.) 17 வயது பெண்கள் பிரிவில் சா. மேரிருஸ்மா (கிளி. வேரவில் இந்து ம.வி.), 19 வயது ஆண்கள் பிரிவில் நா. தஸ்லிம் (கிளி. நாச்சிக்குடா ஜி.எம்.எம்.எஸ்.), 19 வயது பெண்கள் பிரிவில் அ. அருட்திரேசா (கிளி. முழங்காவில் ம.வி), ஜெ. திமோன்ஸா (கிளி. முழங்காவில் ம.வி.) 21 வயது ஆண்கள் பிரிவில் பி. றுயிந்தன் (கிளி. பூநகரி ம.வி), 21 வயது பெண்கள் பிரிவில் அ. அமலகொலின்சா (கிளி. முழங்காவில் ம.வி), சு. சஜேந்தினி (கிளி. பூநகரி நல்லூர் ம.வி.), எஸ். கோபிகா (கிளி. கறுக்காய்தீவு ம.வி. (112)

## மருதங்கேணி கோட்ட மட்ட முடிவுகள்

மருதங்கேணி கோட்ட மட்டப் போட்டிகளின் தொடர்ச்சி...

**குண்டு எறிதல்**

ஜெ. மக்ஸ்சிம், குடத்தனை ஏ.எம்.ரி.எம்.எஸ்., செ. செந்தூரன், நாகர்கோவில் ம.வி, இ. இதயகீதன், குடத்தனை ஜி.ரி. எம்எஸ், த. தர்சன், உடுத்துறை ம.வி.

**தட்டு எறிதல்**

இ. இதயகீதன், குடத்தனை ஜி.ரி.எம்.எஸ்., ஏ. பிலிப்ஸ், வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா, ஜெ. மக்ஸ்சிம், குடத்தனை ஏ.எம்.ரி.எம்.எஸ்.

**ஈட்டி எறிதல்**

ஜெ. மக்ஸ்சிம், குடத்தனை ஏ.எம்.ரி.எம்.எஸ்., த. தனுசன், உடுத்துறை ம.வி, செ. செந்தூரன், நாகர்கோவில் ம.வி, க. ஜெகதீஸ்வரன், நாகர்கோவில் ம.வி.

**அஞ்சலோட்டம்**

மருதங்கேணி ஏச்.ரி.எம்.எஸ்., உடுத்துமுறை ம.வி, வெற்றிலைகேணி பரமேஸ்வரா வித்தி.

**அஞ்சலோட்டம்** செம்பியன்பற்று ஜி.ரி. எம்எஸ், வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தி, மருதங்கேணி ஏ.ரி. எம்.எஸ்.

**100 மீற்றர் ஓட்டம்** 19 வயது பிரிவு- ஆ. ரஞ்சிதன், ஆழியவளை, சி.சி.ரி.எம்., இ. கபில்ராஜ், மணற்காடு ஆர்.சி.ரி.எம்., ஜெ. ஜெபதாஸ், மணற்காடு ஆர்.சி.ரி.எம், பி. பிரகாஷ், வெற்றிலைக் கேணி பரமேஸ்வரா வித்தி, எஸ். கேதீஸ், ஆழியவளை சி.சி.ரி.எம்.

## துடுப்பினை எடுடா துணிவோடு அடிடா



(யாழ்ப்பாணம்)

வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படுகின்ற சென். ஜோன்ஸ கல்லூரி மற்றும் யாழ். மத்திய கல்லூரி அணிகளுக்கிடையிலான மூன்று நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் விளையாடும் வீரர்களை உற்சாகமூட்டும் வகையில் இறுவெட்டு ஒன்று வெளியிடப்பட்டது.

யாழ். மத்திய கல்லூரி அணியின் வீரர்களை உற்சாகமூட்டும் வகையில் உருவாக்கப்பட்ட இவ் இசை பாடல் கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தலைமையில் வெளியிடப்பட்டது.

துடுப்பினை எடுடா, துணிவோடு அடிடா எனும் இவ் இசை பாடசாலை நாடக மன்றப் பொறுப்பாசிரியரான எஸ்.ரி. குமரனின் வழிப்படுத்தலில், அ. ஜெயதீசினுடைய இசையமைப்பில் அஜிகரன், கவிராஜ், கிரிசாந் ஆகியோர் கவிவரிகளை எழுத்தி உருவாக்கியிருந்தனர். இவ் இறுவட்டை எஸ்.கே. எழில்வேந்தன் வெளியிட்டு வைக்க விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் ஈ. பிரபாகரன் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. இப்பாடல் கிரிக்கெட் இரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## யாழ். வலய கரப்பந்தாட்டம் முடிவுகள் வெளிவந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளது.

கடந்த 19ஆம் திகதி ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் விளையாட்டு மைதானத்தில் இப்போட்டிகள் நடைபெற்றது.

ஆண், பெண் என இரு பாலாருக்குமிடையில் நடைபெற்ற இப்போட்டி வயது அடிப்படையில் இடம்பெற்றது.

இதில் 15 வயது ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை நடராஜா இராமலிங்கம் வித்தியாலயமும், இரண்டாமிடத்தை ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயமும், மூன்றாமிடத்தை கோப்பாய் மகா வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன.

17 வயது ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை நடராஜா இராமலிங்கம் வித்தியாலயமும், இரண்டாமிடத்தை ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயமும், மூன்றாமிடத்தை புத்தூர் சோமஸ் கந்தா கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

19 வயது ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை சோமஸ்கந்தாக் கல்லூரி அணியும் இரண்டாமிடத்தை அரியாலை கனகரத்தினம் மகாவித்தியாலயமும், மூன்றாமிடத்தை சென். ஜோன்ஸ் கல்லூரி அணியும் பெற்றுக் கொண்டன.


15 வயது பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை நடராஜா இராமலிங்கம் வித்தியாலய அணியும், இரண்டாமிடத்தை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணியும் பெற்றுக் கொண்டன.

17 வயது பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை அத்தியார் இந்துக் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை நடராஜா இராமலிங்கம் வித்தியாலய அணியும், மூன்றாமிடத்தை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணியும் பெற்றுக் கொண்டன.

19 வயது பெண்கள் பிரிவில், முதலாமிடத்தை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை அச்சுவேலி மத்திய கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை கோண்டாவில் இராம கிருஷ்ணா மகாவித்தியாலய அணியும் பெற்றுக் கொண்டன. (93)

# ஆளும் கட்சி எம்.எல்.ஏ தீவிரவாதிகளால் கடத்தல்

## விடுவிக்க மாநில அரசு தீவிர முயற்சி



(புவனேஸ்வர்)


ஒரிசா மாநிலத்தில் ஆளும் பிஜு ஜனதா தள எம்.எல்.ஏ. ஒருவரை மாவோ தீவிரவாதிகள் துப்பாக்கி முனையில் கடத்தி காட்டுக்குள் கொண்டு சென்றுள்ளனர்.

கடத்தப்பட்ட எம்.எல்.ஏ.யை விடுவிக்க மாநில அரசு கடும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்னர் கடத்தப்பட்ட இத்தாலியினர் இன்னும் விடுவிக்கப் படாத இந்நேரத்தில் மேலும் ஒரு எம்.எல்.ஏ. கடத்தப்பட்டிருப்பது அவரது தொகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இம்மாநிலத்தின் கோராபுட் மாவட்டத்தில் உள்ள லஷ்மிபூர் தொகுதியில் எம்.எல்.ஏ.வாக தேர்வு செய்யப்பட்ட ஜினா ஹிகாக்கா என்பவர் தனது ஆதரவாளர்களுடன் கோரபுட்டிலிருந்து வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தார்.

இந்நேரத்தில் டோயாபுட் பகுதியில் துப்பாக்கிகளுடன் வந்த 50 மாவோயிஸ்டுகள் இவரது வாகனத்தை வழிமறித்துள்ளனர். எம்.எல்.ஏ.யை மட்டும் பிடித்துக் கொண்டு ஏனைய அவரது பாதுகாவலர், சாரதி மற்றும் சிலரை விட்டுவிட்டு அவரைக் காட்டுக்குள் கொண்டு சென்றுள்ளனர்.

விடுவிக்கப்பட்டவர்கள் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் தகவல் கொடுத்தனர். இதன் அடிப்படையில் பொலிஸார் எம்.எல்.ஏ.யைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.




# ஆர்ப்பாட்டத்தால் கைது



(சென்னை)

கூடங்குளம் அணு உலைக்கு எதிராக இடிந்தகரையில் உண்ணாவிரதம் இருந்து வரும் உதயகுமார் உள்ளிட்டோரை நேரில் சந்திக்க பேரணியாக செல்ல முயன்றதாக மறுமலர்ச்சி தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ; பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ.மணி, நாம் தமிழர் இயக்க தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உட்பட ஐநூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முன்னதாக பாளையங்கோட்டையில் கூடங்குளம் அணு உலைக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மறுமலர்ச்சி தி.மு.க உட்பட பல்வேறு அமைப்பினர் கண்டன உரையாற்றினர்.

ஆர்ப்பாட்டம் முடிந்ததும் வைகோ, கொளத்தூர் மணி உள்ளிட்டோர் பேரணியாக இடிந்தகரை நோக்கிச் செல்ல முயற்சித்தனர். ஆனால் பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தி கைது செய்தனர். இதனால் பாளையங்கோட்டை, கூடங்குளம் பகுதிகளில் பரபரப்பு ஏற்பட்டது.

# இந்திய எல்லைக்குள் சீனர்கள் அத்துமீறல்



(புதுடில்லி)

இந்திய எல்லைக்குள் சீனர்கள் அத்துமீறி நுழைவதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா,பாகிஸ்தானிடமிருந்து ஆக்கிரமிப்பு செய்த பகுதிகளில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு உள்ளது.

இப்பகுதியில் சீனாவின் எல்லைப்பகுதியும் உள்ளதால் இங்கு சீனர்கள் அத்துமீறி ஊடுருவி வருவது அதிகரித்து வருகிறது.

இது குறித்து இப்பகுதியின் 25 ஆவது பிரிவு கொமாண்டிங் அதிகாரி மேஜர் ஜெனரல் கே.எச்.சிங் கூறுகையில்,

ஜம்மு - காஷ்மீரில் ரஜோரி பகுதியிலிருந்து பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் வரை உள்ள 170 கி.மீ. தொலைவில் எல்லைக்கட்டுபாட்டில், சீனாவைச் சேர்ந்த பொறியாளர்கள், மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் சிலர் இராணுவ உடையணிந்து இந்திய எல்லைக்குள் அத்துமீறி நுழைகின்றனர்.

அவர்கள் இராணுவத்தினரா அல்லது குடிமக்களா எனத் தெரியவில்லை.

இந்திய எல்லைக்குள் கடந்த 8 மாதங்களில் 10 ஊடுருவல் சம்பங்கள் நடந்துள்ளன. இவற்றில் 30 தீவிரவாதிகள் தடுதது நிறுத்தப்பட்டுள்ளனர்.

பெண் தீவிரவாதிகளுக்கு மனித வெடிகுண்டுத் தாக்குதல் பயிற்சியும் எல்லைப்பகுதியில் வழங்கப்பட்டு வருகிறது.

ரஜோரி-பூன்ஞ் பகுதில் 30 இற்கும் மேறபட்ட தீவிரவாதிகள் ஊடுருவ முயற்சி செய்து வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

# மேடை சரிந்து அமைச்சர் காயம்

(புதுக்கோட்டை)

புதுக்கோட்டை மாவட்டம் வலங்கைமான் அருகே நேற்றுமுன்தினம் காலை இலவச மிக்சி, கிரைண்டர் வழங்கும் விழாவில் கூட்டம் அதிகமானதால் மேடை திடீரென சரிந்தது. இதில் மேடையிலிருந்த உணவுத் துறை அமைச்சர் காமராஜ் கீழே விழுந்தார். காயமுற்ற அவர் தனியார் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# 78 வயதிலும் குறிதவறாது



(ஜோரி)

சந்திரா தோமர் என்ற மூதாட்டி தனது 78 ஆவது வயதிலும் குறிதவறாமல் துப்பாக்கி சுடும் வீராங்கனையாக உலா வருகிறார்.

இவர் உத்தரபிரதேசத்தில் உள்ள ஜோரி கிராமத்தைச் சேர்நதவர். இதுவரை 25 தேசியப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றிவாகை சூடிய இவருக்கு ஆறு குழந்தைகளும் 15 பேரக் குழந்தைகளும் உள்ளனர்.

நரைத்த முடியுடன் வயதான தோற்றத்தில் காட்சியளிக்கும் இவர் துப்பாக்கி சுடும் போட்டியில் டில்லி பொலிஸ் அதிகாரியை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

வாரந்தோறும் தனது பேர்த்தியின் பயிற்சிக்காக துணைக் சென்ற மூதாட்டியின் துப்பாக்கி சுடும் ஆசையையும், திறமையையும் கவனித்த பயிற்சியாளர் பரூக் பாதான் இவருக்கு ஊக்கமளித்தார்.

திறமைக்கு வயது ஒரு தடையல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் தனது முயற்சியால் பல்வேறு போட்டிகளில் பங்கு பற்றி தொடர்ந்து பரிசுகளையும், பதக்கங்களையும் வென்று வருகின்றார்.

குறிபார்க்கும் திறனை வளர்த்துக் கொள்ளும் வகையில் தண்ணீர் போத்தலில் கற்களை எறிந்து பயிற்சி பெறுகிறார்.

# விரைவில் விவாகரத்து பெறலாம்



(புதுடில்லி)

பிரிந்த தம்பதியர் விரைவில் விவாகரத்து பெறும் வகையில், புதிய சட்ட மசோதா கொண்டு வரப்படுகிறது.

கடந்த 2010 ஆம் ஆண்டு திருமண சட்டத்திருத்த மசோதா ராஜ்யசபாவில் தாக்கல் செய்யப்பட்டது. பின்னர், இநத மசோதாவிற்கான சட்டம் நீதித்துறைக்கான நாடாளுமன்ற நிலைக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. இதைப் பரிசீலித்த நிலைக் குழு, இந்த மசோதாவில் நான்கு திருத்தங்களைச் செயயும்படி பரிந்துரை செய்துள்ளது.

இதற்கு ஏற்ப, மசோதாவை மாறறி அமைக்க, மத்திய அமைச்சரவை நேற்றுமுன்தினம் ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி, பிரிந்த தம்பதியர் விரைவில் விவாகரத்து பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தறபோது, பிரிந்த தம்பதியர் பரஸ்பரம் விவாகரத்துக் கோரி விண்ணப்பித்தால், குறைந்த பட்சம் ஆறு மாதம் முதல் 18 மாதங்கள் வரை, அவர்கள் விவாகரத்து பெற காத்திருக்க வேண்டும். ஆனால் இந்தப் புதிய திருத்தத்தின்படி இனி அந்த நிலைமை இருக்காது.

இனிச் சேர்ந்து வாழவே முடியாத என்ற புதிய விதி முறை, சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதால், பிரிந்தவர்கள் விரைவில் விவாகரத்து பெற்று விடமுடியும்.

# நிரூபிக்கத் தயார்



அலைக்கற்றை ஒதுக்கீடு முறைகேடு வழக்கில் புலனாய்வுததுறை பதிவு செய்துள்ள குற்றசாட்டுகளை இரத்துச் செய்யக் கோரி புதுடில்லி உயர் நீதிமன்றத்தில் கருணாநிதி மகள் கனிமொழி மனு தாக்கல் செய்துள்ளார்.

இந்த விவகாரத்தில் எந்த வகையிலும் எனக்குத் தொடர்பு இல்லை என்று தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ....................................


முகவரி : ....................................

பிறந்த ஆண்டு : ....................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் ....................................

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

## எல்லா இன மக்களுக்குமே



இயேசுவின் நற்செய்தி யூதர்களுக்கு மட்டுமல்ல, பிற இனத்தாருக்கும் உலக மக்கள் அனைவருக்குமே உரியது என்பது உண்மை. இயேசுவில் நம்பிக்கை கொண்டோர் பிற மக்களையும் இயேசுவிடம் இட்டுச் செல்ல வேண்டும். ஏனென்றால் இயேசுவைக் காண விரும்பி வருகின்ற மக்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களது உள்ளத்தில் எழுகின்ற தாகத்தைத் தணிக்க வேண்டும் என்றால் அவர்களை வாழ்வின் ஊற்றாகிய இயேசுவிடம் நாம் இட்டுச் செல்ல வேண்டும். இயேசுவே நமக்கு வாழ்வளிக்கின்றார். மண்ணில் விழுந்து மடிகின்ற கோதுமை மிகுந்த விளைச்சலைத் தருவதுபோல, சிலுவையில் இறக்கின்ற இயேசு நமக்கு நிலைவாழ்வு அளிக்கிறார். அவரை நாம் அணுகிச் சென்று வாழ்வு பெறுவதோடு பிறரையும் அவரிம் கூட்டிச் செல்ல நாம் அழைக்கப் படுகிறோம்.

கோதுமை மணிபோல மண்ணில் மடிந்தாலும், இறுதியில் இறைத்தந்தையால் இயேசு மாட்சிப்படுத்தப்படுவார் என்னும் உண்மையை அப்போது அவர்கள் உணராமல் இருக்கலாம். ஆனால், இயேசுவின் இறப்பு, உயிர்ப்பு என்னும் அனுபவங்களிலிருந்து சீடர்கள் கோதுமை மணியின் மாட்சியை உணர்ந்துகொண்டனர் நாமும் இந்த ஞானத்தைக் கற்றுக்கொள்வோம்.

மறையாசிரியர் - ஜெ.அலெக்ஸ்

# சிரியாவில் தாக்குதல்கள் தீவிரம்; நாளொன்றுக்கு 10 பேர் பலி!

சிரியாவில் பல பகுதிகளில் நடைபெற்ற வன்முறையில் ஒரே நாளில் மட்டும் அப்பாவிப்பொது மக்கள் உட்பட 62 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. சிரியாவின் மத்திய பகுதியான ஹமா, ஹோம்ஸ் மற்றும் இத்லிப்பில் நடைபெற்ற இராணுவத் தாக்குதலில் 35 பொது மக்கள் கொல்லப்பட்டதாகவும், நாடு முழுவதும் நடைபெற்ற மோதலில் 18 இராணுவ வீரர்கள், 9 துணை இராணுவத்தினர் உயிரிழந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்லிப் மாகாணத்தில் மிக அதிகபட்சமாக 17 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் துருக்கியின் எல்லைப் பகுதியில் பொதுமக்கள் பயணம் செய்த பேருந்து மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டனர்.

மேலும் ஹோம்ஸ் மாகாணத்தில் 12 பேரும், ஹமாவில் 5 பேரும், டாராவில் ஒருவரும் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரியாவில் கடந்த ஓராண்டாக நடந்து வரும் தொடர் வன்முறையில் இதுவரை 9,100 பேர் உயிரிழந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி அசாத்துக்கு எதிரான போராட்டம் வலுவடையவே, இராணுவத்தினர் முடுக்கி விடப்பட்டுள்ளனர். எனவே இருதரப்பினரிடையே நடைபெறும் மோதலில் தினசரி 10இற்கும் அதிகமானோர் உயிரிழப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஈரான்மீது இஸ்ரேல் காதல்




(டெல்அவிவ்)

ஈரான் மீது எந்த நேரத்திலும் இஸ்ரேல் போர் தொடுக்கக் கூடிய சூழ்நிலை உள்ளது. இதைக் கைவிட வலியுறுத்தி இஸ்ரேலியர்கள் புதிய பேஸ்புக் பக்கம் ஒன்றைத் தயாரித்துள்ளனர்.


இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ்வில் வசித்து வரும் ரோனி எட்ரிஸ் மற்றும் மிசெல் தமிர் தம்பதியினர் கடந்த வாரம் "Iranians, we love you" என்று ஒரு பக்கத்தை தொடங்கியிருந்தனர்.

இப்போது "Iranians, we love you" என்ற பக்கத்தை "லைக்" செய்கிறோம் என்று கிளிக் செய்திருப்போரின் எண்ணிக்கை 18 ஆயிரம்.

எட்ரிஸ் தம்பதியினர் இது பற்றி கூறுகையில், நாங்கள் தனிப்பட்ட முறையில்தான் பேஸ்புக்கில் பதிவைத் தொடங்கினோம். ஈரானியர்களே நாங்கள் உங்களை நேசிக்கிறோம். நாங்கள் உங்கள் நாட்டின் மீது ஒருபோதும் குண்டுவீச மாட்டோம் என்று அதில் பதிவு செய்திருந்தோம்.

இப்போது கற்பனையே செய்து பார்க்க முடியவில்லை. எங்களது பக்கம் இத்தனை ஆயிரம் பேரை ஈர்த்திருக்கிறது என்பது நிச்சயம் நம்ப முடியாத ஒன்றுதான் என்கின்றனர்.

# இரண்டு மாதங்களின் பின் ஐவரின் உடல்கள் மீட்பு



(ரோம்)

இத்தாலியில் கோஸ்டா கன்கார்டியா என்ற சொகுசுக் கப்பல் கடலில் மூழ்கியதில் 30இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இச்சம்பவம் நிகழ்ந்து இரண்டு மாதங்கள் முடிவடைந்துள்ள நிலையில், மேலும் 5 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

இத்தாலியைச் சேர்ந்த கோஸ்டா கன்கார்டியா என்ற மிகப்பெரிய பயணிகள் கப்பல் ஒன்று ரோம் நகர் அருகே உள்ள தீவு ஒன்றில் பாறையில் மோதியதில் கடந்த ஜனவரி மாதம் 14ஆம் திகதி தரை தட்டி கவிழ்ந்து விபத்திற்குள்ளானது. இதில் 30இற்கும் மேற்பட்டோர் பலியாயினர். நாலாயிரத்துக்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டனர்.

# எலிசபெத் கோபுரம்



பிரிட்டன் ராணியாக எலிசபெத் மகுடம் சூட்டப்பட்டு 60 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு வைர விழா கொண்டாட்டங்கள் நடைபெறுகிறது.

இதன் ஒரு பகுதியாக அவரைக்கௌரவிக்கும் விதத்தில் வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனையில் உள்ள பிக் பென் கோபுரத்திற்கு எலிசபெத் கோபுரம் என்று பெயர் சூட்டுமாறு பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இக்கோபுரத்தின் உண்மையான பெயர் கிங்ஸ் கோபுரம் என்பது குறிப்பிடத்தக்கது.

# சீனாவின் கடன் மதிப்பு அதிகரிப்பு

(பீஜிங்)

சீனக் கடனின் மதிப்பு கடந்த 27 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளதாக அந்நாட்டின் அந்நியச் செலாவணி நிர்வாகத்துறை தெரிவித்துள்ளது.

கடந்தாண்டு நாட்டின் வெளிப்புறக் கடன் 695 பில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியுள்ளது.

இந்த மதிப்பு 2010ஆம் ஆண்டில் இருந்த அளவைக் காட்டிலும் 146 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அதிகம் என்றும், சதவீதத்தின் அடிப்படையில் 27 சதவீதம் அதிகம் என்றும் அந்நியச் செலாவணி நிர்வாகத்துறை தெரிவித்துள்ளது.

# நாசா இரகசியங்களை விற்க முயன்ற விஞ்ஞானிக்கு 13 ஆண்டுகள் சிறை

(வொஷிங்டன்)



அமெரிக்காவின் நாசா விண்வெளி மற்றும் பாதுகாப்பு குறித்த இரகசியங்களை இஸ்ரேலுக்கு விற்க முயன்றதாக முன்னாள் நாசா விண்வெளி விஞ்ஞானிக்கு உள்ளூர் நீதிமன்றம் 13 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியது.

அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்டீவொர்ட் நௌசட்டே(வயது -42) இவர், அந்நாட்டின் விண்வெளி ஆய்வு மையமான நாசாவில் விஞ்ஞானியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நாசா விண்வெளி ஆய்வு மற்றும் பாதுகாப்புக் குறித்த தகவல்களைச் சேகரித்து இஸ்ரேல் நாட்டிற்கு விற்க முயன்றதாக ஸ்டீவொர்ட் கைது செய்யப்பட்டார். இதையடுத்து இவர் மீதான வழக்கு, ஜம்ப்சூட் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் நடந்த விசாரணையில், குற்றத்தை,தான் ஒப்புக்கொள்வதாக ஸ்டீவொர்ட் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து நீதிபதி பவுல் பயர்ட்மேன், விண்வெளி இரகசியங்களை விற்க முயன்றதாக, ஸ்டீவொர்ட் நௌசட்டேவுக்கு 13 ஆண்டு சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

# பதிவிறக்கப் பெட்டகம்

கொழும்பில் பிரபல அலுவலகம் ஒன்றில் பணிபுரியும் கிளார்க் ஒருவர் அலுவலகம் முழந்து வந்துகொண்ழருந்தார். காலிமுகத திடலில் இரண்டு பேர் பேசிக் கொண்ழருந்ததைக் கவனித்தார்.

"கடவுளைக் காண முழயுமா?" என்று ஒருவன் கேட்க, "ஓ முழயுமே. உன் சேர்ட்டைக் கழற்றிவிட்டு பத்தழ முன்னால் சென்று மேலே பார், கடவுள் தெரிவார்" என்றான்.

அவனும் அவ்வாறே செய்து திரும்ப வந்தான். பிரகாசமான முகத்துடன், "தாங்ஸ், நீங்கள் என் கண்ணைத் திறந்து விட்டீர்கள்; கடவுளை நன்றாகப் பார்க்க முழந்தது" என்றான்.

இதை வேழக்கை பார்த்துக் கொண்ழருந்த கிளார்க் அவரை அணுகி, "நானும் அதைப் பார்க்கிறேனே" என்று கூறித் தானாகவே சேர்ட்டைக் கழற்றிக் கொடுத்துவிட்டு பத்தழ முன் சென்று வானத்தைப் பார்த்தார். சில காக்கைகளையும் ரீவி அன்ரெனாககளையும் தவிர வேறெதுவும் தெரியவில்லை. திரும்பிப் பார்த்தால் இருவரையும் காணோம். அவரது சேர்ட்டையும் காணோம். சேர்ட் பொக்கற்றினுள் அவரது அந்த மாதச் சம்பளம்...

*** *** ***

மார்க் ட்வெய்ன் பத்திரிகையொன்றின் ஆசிரியராக இருந்தபோது அவருக்குக் கடன்தொல்லை அதிகம் இருந்தது. அவர் செலுத்த வேண்ழய கடன் தொகைகளை ஞாபகப்படுத்தி பல ரசீதுகள் வரும். பழத்துக் கூடப் பார்க்காமல் வீசிக் குப்பைக் கூடைக்குள் எறிந்து விடுவார்.

ஒருமுறை அப்பழ எறியப் போகும் நேரத்தில், உதவியாளன் குறுக்கிட்டு, "அந்த ரசீதின் பின்பக்கம் பார்த்தீர்களா? உடனே ரசீதுக்குரிய பணத்தைத் தராவிட்டால் வழக்குத் தொடரப்படும் என்று குறிப்பிடப்பட்ழருக்கிறதே, கவனித்தீர்களா?" என்றான்.

"இரண்டு பக்கமும் எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதிகளைக் கவனிக்க மாட்டோம் என்ற எழுதி இதைத் திருப்பி அனுப்பிவிழு" என்றாராம் மார்க் ட்வெய்ன்.

*** *** ***

குழந்தைப் பருவத்தில் பசி பட்ழனியை அனுபவித்துப் பெரியாளான பிறகு பல இலட்சங்களைச் சந்தித்த வியாபாரி ஒருவன் தன் மரணப் படுக்கையில் இருந்தான். அந்த வேளையில் எல்லோரும் வழக்கமாகச் சொல்வது போல, தனது மகனை அழைத்து அறிவுரை கூறத் தொடங்கினான்: "இதோ பார் மகனே! என் வெற்றிக்கு அழப்படைக் காரணங்கள் இரண்டு. அதாவது நேர்மையும், சமயோசித புத்தியும். சரக்குகளை ஒருவருக்கு குறித்த நேரத்தில் விநியோகம் செய்வதாக நீ வாக்குறுதி கொடுககும் பட்சத்தில், அதனால் என்ன துன்பம் வந்தாலும் சரி, அது உனக்குப் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தினாலும் சரி, அந்த சரக்குகளை தவறாமல் விநியோகம் செய்ய வேண்டும். இதுதான் நேர்மை என்பது!"

"சரி அப்பா! நான் இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்கிறேன்" என்ற மகன் தொடர்ந்து கேட்டான்: "சமயோசித புத்தி எனறால் என்ன என்பதையும் இப்போது விளக்கிச் சொல்கிறீர்களா?"

"அது மிகவும் சுலபமான விஷயம் மகனே... அவ்வாறு வாக்குறுதி எதையும் கொடுக்காமலிருப்பதே சமயோசித புத்தியாகும்!"

*** *** ***

ஒரு வயோதிப இல்லத்தில் முதியவர்கள் இருவர். ஒருவருக்கு முதுகுத்தண்ழல் கோளாறு. எப்போதும் மல்லாந்து படுத்தபழ. மற்றவருக்கு நீரிழிவு நோய். அவரும் நடமாட முழயாதவர். இவருடைய படுக்கு ஜன்னல் அருகில் இருந்தது. எப்போதும் ஜன்னல் மூலம் தெருவைப் பார்த்தபழ இருந்தார்.

"அங்கே என்ன நடக்கிறது எனக்கும் சொல்லுங்கள்" என்று படுத்திருந்தவர் கேட்க, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சுவையான சம்பவத்தைச் சொல்லிவருகிறார்.

ஒருநாள் அந்த ஜன்னல் முதியவர் இறந்து போக, அந்த இடத்திற்குத் தன் படுக்கையை நகர்த்திப் போடும்பழ கேட்டு, இவர் அந்த ஜன்னல் வழியே பார்த்தார். குறுக்கே ஒரு பெரிய சுவர் இருந்ததே தவிர, தெரு எதுவும் தெரியவில்லை.


தாதியிடம், "இங்கே படுத்திருந்த பெரியவர், வெளியே என்னென்னவோ தெரிவதாக சொல்லிக் கொண்ழருந்தாரே– வெறும சுவர்தானே தெரிகிறது?" என்று கேட்டார்.

"உங்களுக்கு உற்சாகமூட்டுவதற்காக, சந்தோஷப்படுத்துவதற்காக கற்பனை பண்ணிச் சொல்லியிருப்பார். உங்களுக்காவது சுவராவது தெரிகிறது. அவருக்கு அதுவும் தெரிந்திருககாது."

"ஏன்?"

"அவர் முழுக்க முழுக்கப் பார்வை இழந்தவர்!"

# மாணவர்களுக்கு ஊக்குவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் நாயன்மார்கட்டு அரசடிப்பிள்ளையார் ஆலயத் தேர்த் திருவிழா உற்சவ நிகழ்வு நேற்று முன்தினம் மஹோற்சவ பிரதமகுரு சிவஸ்ரீ.மு.தயாபரக் குருக்கள் ஆலயமுதல்வர் சிவஸ்ரீ.மகாலிங்கக்குருக்கள் தலைமையில் பூஜை வழிபாடுகளுடன் பக்தி பூர்வமாக இடம்பெற்றன.

இந்த ஆலயத் தேர்த் திருவிழா உற்சவத்தின் போது ஆலய அறங்கொடை சங்கத்தினர் சார்பாக நடைபெற்ற வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கான உதவித்தொகை வழங்கும் நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) கலந்து கொண்டு மாணவர்களுக்கான உதவித்தொகையினை வழங்கினார்.

நாயன்மார் கட்டு அரசடிப்பிள்ளையார் ஆலய பிரதேச மக்களால் முன்வைக்கப்பட்ட பிரதான வீதிகளுக்கான மின் குமிழ்கள் பொருத்துவது தொடர்பான கோரிக்கையை ஏற்று இப்பிரதேச வீதிகளுக்கான மின்குமிழ்கள் ஓரிரு கிழமைகளில் பொருத்தப்படுமென ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் அங்கு உறுதியளித்தார்.

இந் நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் முக்கியஸ்தர் நேரு, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நல்லூர் பிரதேச இணைப்பாளர் ரவீந்திரதாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# "வேள்வித்திருமகன்" திருப்பாடுகளின் காட்சி திருமறைக் கலாமன்றில் அரங்கேறுகிறது

(கொழும்புத்துறை)

யாழ். திருமறைக்காலாமன்றம் தயாரித்து வழங்கும் மாபெரும் படைப்பான வேள்வித்திரு மகன் திருப்பாடுகளின் காட்சி எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை முதல் முதலாம் திகதிவரை 4 நாட்கள் 238, பிரதான வீதி யாழ்ப் பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாக வுள்ள திருப்பாடுகளின் காட்சி வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரமாண்டமான அரங்க அமைப்பு, ஒலி ஒளி காட்சியமைப்பு போன்றவற்றுடன் அரங்கிலும் அரங்கப்பின்னணியிலுமாக இருநூறுக்கும் அதிகமான கலைஞர்கள் பங்கேற்கின்ற இவ்வாற்றுகைக்கான ஏற்பாடுகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. வேள்வித் திருமகன் திருப்பாடுகளின் காட்சிக்கான எழுத்து நெறியாள்கையை திருமறைக்கலாமன்ற இயக்குநர் நீ.மரிய சேவியர் அடிகளார் மேற்கொணடுள்ளார். இதுவரை எழுதப்பட்ட பிரதிகளில் இருந்து மொழி நடையிலும் பொருள் அளிக்கையிலும் சற்று மாறுபட்டதாக எழுதப்பட்டுள்ள இப்படைப்பு வேள்விக் கருவை மையப்படுத்தியதாக அமைந்துள்ளதுடன் மேலும் பல புதிய மாற்றங்களுடன் அரங்கேற்றப்படவுள்ளது.

அதேவேளை பார்வையாளர்களுக்கு உதவும் வகையில் இந் நாடகப்பிரதியை நூலாக பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் திருமறைக்கலாமன்றத்தால் மேடையேற்றப்படும் திருப்பாடுகளின் காட்சியை பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்வையிடுவது குறிப்பிடத்தக்கது. (52)

# மாங்குளத்தில் பொதுச்சந்தை; எப்போது சாத்தியமாகும்?

(மல்லாவி)

மாங்குளம் பிரதேசத்தில் பொதுச்சந்தை இன்மையால் மக்கள் நீண்ட தூரம் சென்று பெரும் பணத்தைச் செலவு செய்து பொருட்களைக் கொள்வனவு செய்ய வேண்டியிருப்பதாக அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இப் பிரதேசத்தில் அண்மைக் காலங்களில் இயங்கி வந்த பொதுச் சந்தை கடந்த காலங்களில் இடம் பெற்ற யுத்தத்தினால் சிதைவடைந்த நிலையில் இன்னும் இருந்து வருகின்றது.

இப் பிரதேசத்தில் சுமார் 300 இற்கு அதிகமான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இப் பகுதியில் பொதுச்சந்தை இன்மையால் தற்சமயம் மக்கள் மல்லாவிக்கு சென்றே பொருட்களைக் கொள்வனவு செய்யவேண்டியுள்ளது.

எனவே புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் இத் தேவையை அறிந்து இச் சந்தையைப் புனரமைத்துத் தருமாறு மக்[illegible]ர் சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(143)

# சமய பாடத்துக்கு முக்கியத்துவம்

(வலிகாமம்)

இலங்கையிலுள்ள பாடசாலைகளில் 2013ஆம் ஆண்டு முதல் தரம் 10,11 வகுப்புக்களுக்கு சைவநெறி பாடம் கற்பிப்பதற்கு வாரத்தில் மூன்று பாடவேளைகள் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இதுவரை காலமும் இலங்கையிலுள்ள பாடசாலைகளில் தரம் 6-11வரையுள்ள வகுப்புக்களில் சமய பாடம் கற்பிப்பதற்கு இரு பாடவேளைகளே ஒதுக்கப்பட்டு வந்துள்ளன. தரம் 10,11 பாடத்திட்டத்தின் அளவுக்கு இந்தப் பாடவேளைகள் போதாது என ஆசிரியர்கள் முறையிட்டதை அடுத்தே இந்த மாற்றம் நடைமுறைக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (06)

# வீதிகளுக்கு விமோசனம்; மாநகரசபை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட 13 வீதிகள் புனரமைக்கப்பட்டவுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகரசபை மத்தியில் இருந்து குருநகர் மத்திய கிழக்கு வீதி, மத்தியூஸ் வீதி, கோவில் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, மூத்தவிநாயகர் வீதி, வைமன் வீதி, பாசையூர் 2ஆம் குறுக்குத்தெரு, சிறாம்பியடி வீதி, மணல்தறை வீதி, ஓடக்கரை மேற்கு ஒழுங்கை, பாலுடையார் வீதி, குருநகர் 3ஆம் குறுக்குத்தெரு, ஆசீர்வாதப்பர் லேன் ஆகிய வீதிகளே புனரமைப்புச் செய்யவுள்ளதாகத் தெரிவித்தார்.

# வறிய மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள்

பிரதான உழைப்பாளிகளை இழந்த தென்மராட்சி, வலி. தெற்கு பிரதேசங்களின் குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு முதற் கட்டமாக ஐந்து துவிச்சக்கர வண்டிகளை அறவழிப் போராட்டக் குழு வழங்கவுள்ளதாக அதன் செயலாளர் அ. ஜீவகதாஸ் தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் காசல் நகரில் உள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அனெஸ்ரி இரட்ணசிங்கம் தலைமையில் நண்பர்களின் நிதி உதவியுடன் இத் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளன.

நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை அறவழிப் போராட்டக் குழுத்தலைவர் ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வொன்றில் இத்துவிச்ச[illegible] வண்டிகள் வழங்கப்படவுள்ளன.

# சர்வதேச தரத்திலான மருத்துவசேவை வடபகுதி மக்களுக்கு வாய்ப்பு

வடபகுதி மக்களுக்கு சர்வதேச தரத்திலான சிகிச்சைகளை வழங்கும் நோக்கில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நொதேர்ண் சென்ரல் மருத்துவமனை (Northern Central Hospital) இன்று 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை திறந்து வைக்கப்படவுள்ளது.

சர்வதேச ரீதியில் உயர் தர நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள இம் மருத்துவமனையானது யாழ்ப்பாணம், பலாலி வீதியில் 342ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது.

1979ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் முதலாவதாக அமைக்கப்பட்ட தனியார் வைத்தியசாலையான சென்ரல் நேர்சிங்ஹோம் வட பிராந்திய மக்களுக்கு சுகாதார நலத் தீர்வுகளை வழங்கியது. எனினும் யுத்த காலத்தில் நிலவிய சூழ்நிலை காரணமாக இந்த நேர்சிங் ஹோமினை தொடர்ந்து நடத்த முடியாத நிலை நிலவியதால் 1996ஆம் ஆண்டுடன் மூடப்பட்டது.

பின்னர் இந்த நேர்சிங் ஹோமானது 2000ஆம் ஆண்டு மீளத் திறக்கப்பட்டது. இதன் விஸ்தரிப்பின் கட்டமாக கடந்த 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நவீன சர்வதேச ரீதியிலான Northern Central Hospital லை நிர்மாணிப்பதற்கான ஆரம்பப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இம் மருத்துவமனையின் ஸ்தாபகராக எஸ்.பி.சாமியும் பணிப்பாளராக பி.கேசவராஜாவும் திகழ்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் நவீன மருத்துவ சிகிச்சை வசதிகள் கொண்ட மருத்துவமனை ஒன்று இல்லாத காரணத்தால் மக்கள் தமது நேரத்தையும் பணத்தையும் செலவழித்து கொழும்பு மற்றும் வெளிநாடுகளில் அமைந்துள்ள உயர்தர. மருத்துவமனைகளை நாடவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருந்தது. ஆனால் தற்போது இம்மருத்துவமனையின் உரு



வாக்கம் யாழ். மக்களுக்கான சிறந்த வரப்பிரசாதமாகும்.

இம்மருத்துவமனையில் 100 படுக்கை வசதிகள் உள்ளன. அத்துடன் அதிதீவிர சிகிச்சைப்பிரிவுடன் I.C.U இரு சத்திரசிகிச்சைக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அனைத்து அடிப்படை சத்திரசிகிச்சைகளும் இங்கு மேற்கொள்ளப்படவுள்ளன. கதிரியக்கப்பிரிவு (X-Ray) அல்ட்ரா சவுண்ட் (Ultrasound) சிடி ஸ்கான் மற்றும் MRI வசதிகள் உட்பட 13 சனலிங் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் போதிய சாதன வசதிகளுடன் கூடிய ஆய்வு கூடமும் அமைக்கப்பட்டுள்ளது.

60 தாதிமார் பயிற்சி பெற்றுள்ளனர். ஏற்கனவே நேர்சிங் ஹோமில் 40 தாதிமார் பணிபுரிந்து வருகின்றனர். அத்துடன் பிஜியொ தெரப்பிஸ்ட்டுகள் மருந்தாளர்கள் ஆகியோர் மிகவும் தேர்ச்சியுடன் கூடிய பயிற்சியைப் பெற்று தமது சேவையை வழங்கக் காத்திருக்கின்றனர்.

31 வருடங்களுக்கு மேலாக நேர்சிங் ஹோம் ஒன்றினை நடத்திய அனுபவம் அதன் மூலம் பெற்ற வெற்றி என்பன தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய வைத்தியசாலை மூலம் யாழ். மக்களுக்கு நவீன மயமான மருத்துவ சேவைகளை சிறப்பாக வழங்க வழிவகுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எனவே எல்லாவித நோய்களுக்குமான மருத்துவ சிகிச்சை நிபுணர்களை எவ்வித சிரமமுமின்றி இவ்வைத்தியசாலையில் அணுக முடியும். எதிர்கால விஸ்தரிப்புத் திட்டங்களுக்கிணங்க கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவுப் பகுதிகளில் பிராந்திய நிலையங்களை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் நொதேர்ண் சென்ரல் ஹொஸ்பிட்டலின் சேவையை நேரடியாகப்பெறமுடியும். அத்துடன் நடமாடும் சேவைகளை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் அம்பியூலன்ஸ் சேவைகளும் வழங்கப்படவுள்ளன.

எனவே வட மாகாண மக்கள் மிகவும் பழகிய கலாசாரம் நிறைந்த சூழலில் நம்பிக்கையுடன் கூடிய மருத்துவ சேவைகளை அனுபவிக்கக்கூடிய மிகச்சிறந்த வாய்ப்பினை நொதேர்ண் சென்ரல் வைத்தியசாலை இன்று முதல் வழங்கவுள்ளது வடபகுதி மக்களுக்கு இது ஓர் வரப்பிரசாதமாகும்.

# ஈ.பி.டி.பி. உறுப்பினரின் அறிவுரை அடங்கிப் போனது கூட்டமைப்பு




(பருத்தித்துறை)

பருத்தித்துறைப் பிரதேச சபையின் தவிசாளர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி பிரதேச சபையின் கூட்டத்தில் நேரத்தை வீணடித்த கூட்டமைப்பு உறுப்பினர் சபையில் எதிர்க்கட்சித் தலைவரான ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஸ்ரீரங்கேஸ்வரனின் அறிவுரையைக் கேட்டு அமைதியான சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்ற மாதாந்தக் கூட்டத்தின் போது இடம்பெற்றது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

பருத்தித்துறை பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த 23ஆம் திகதி சபை மண்டபத்தில் தவிசாளர் பூபாலசிங்கம் சஞ்சீவன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் ஆளும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பருத்தித்துறை பிரதேசசபை உபதலைவர் மாணிக்கம் லோகசிங்கம், தவிசாளர் தொடர்பாக பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்துப் பேசினார். அதில், சபையின் செயலாளராக கடமையாற்றிய ஜெயவசீகரனுக்கு இன்னமும் ஓர் ஆண்டு சேவையாற்ற முடியும் எனினும் சபையின் தவிசாளரின் அவமதிப்புக் காரணமாகவே ஓய்வு பெற்றுக் கொண்டு சென்றுள்ளார். உள்ளூராட்சி ஆணையாளர் இங்கு வந்து, பேசிய விடயங்கள் அனைத்தும் உண்மையானவை. அவற்றை மறுக்க முடியாது. இச்சபையில் நிர்வாகச் சீர்கேடுகள் தாராளமாக இடம்பெறுகின்றன. மக்களுக்கு பொறுப்புக் கூறு வேண்டும். நீங்கள் உங்கள் தந்தையாரின் திட்டங்களின் படியே நடந்து கொள்கின்றீர்கள். தவிசாளர், பிரதேசசபையின் நிர்வாகத்தில் ஆளுமை இல்லாத நிலையில் இருக்கிறீர்கள். எனவே சுழற்சி முறையில் தலைவர் பதவியை விட்டுக் கொடுக்க வேண்டும். அனுபவம் வாய்ந்தவர்கள் சபையை வழி நடத்துவதற்கு வாய்ப்பளித்து ஒதுங்கிக் கொள்ளுங்கள் எனத் தெரிவித்ததுடன் இன்னும் பல குற்றச்சாட்டுக்களை தொடர்ந்து அடுக்கிக் கொண்டிருந்தார். அதனைத் தொடர்ந்து கூட்டமைப்பின் மற்றொரு சபை உறுப்பினரான க.தவயோகநாதன், உபதவிசாளர் மா.லோகசிங்கத்திற்கு ஆதரவாக பேசினார். மற்றைய சபை உறுப்பினர்கள் பார்த்துக் கொண்டிருந்தனர். பின்னர் சபையின் தவிசாளர் பூ.சஞ்சீவன், இருவருக்கும் பதிலடி கொடுக்க ஆரம்பித்தார். இதன்போது குறுக்கிட்ட சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உள்விவகாரப் பிரச்சினைகளை சபையில் பேசவேண்டாம். அதனை உங்கள் கட்சிக்குள் வைத்துக் கொள்ளவேண்டும் என அறிவுரை கூறியதுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பல மிதவாதிகளும் பல ஆயுதக் குழுக்கள் உள்ளன. அதனால் அதில் பல்வேறு விதமான கருத் துள்ளவர்கள் இருக்கலாம். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலும் பல கட்சிகள் உள்ளன. அதிலும் பல்வேறு கருத்துள்ளவர்கள் உள்ளனர் எனத் தெரிவித்து, தலைவர் பதவிப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வந்தார். அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சபை உறுப்பினர்கள் பொ.திருச்செல்வம் மற்றும் கு.பன்னீர்ச்செல்வன் ஆகியோர் வரவேற்புத் தெரிவித்தனர்.

## ஊரி கடற்றொழிலாளர் சங்க புதிய நிர்வாக சபை தெரிவு



(காரைநகர்)

ஊரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நேற்றுக்காலை 10.00 மணிக்கு ஊரி அண்டர்சன் மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் காரைநகர் ஈ.பி.டி.பி. அமைப்பாளர் வீ.கண்ணன் (ரஜனி) பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கூட்டத்தினை ஆரம்பித்து வைத்தார்.

அத்துடன் புதிய நிர்வாகசபைத் தெரிவும் இடம்பெற்றது. இதில் ஊரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக சி.தங்கவேலு, உபதலைவராக பா.கர்ணன், செயலாளராக பொ.தயாபரன், பொருளாளராக சு.லோகநாதன், உறுப்பினர்களாக த.ராகினி, வே.கணேஸ், திருமதி பொன்னம்மா ஆகியோரும் தெரிவு செய்யப் பட்டனர்.

அதனைத் தொடர்ந்து சமாசத்திற்கான பொதுச்சபை பிரதிநிதி தெரிவும் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராமசேவை அலுவலர் எனப்பலரும் கலந்துகொண்டனர். (எஸ்)

## மனித உரிமை ஆர்வலர்களை அரசு அச்சுறுத்தவில்லை

ஐ.நா. மனித உரிமை பேரவைக் கூட்டத்தில் இலங்கை மனித உரிமை ஆர்வலர்கள், இலங்கை குழுவினரால் மிரட்டப்பட்டதாக நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ள குற்றச்சாட்டை அரசாங்கம் நிராகரித்துள்ளது. ஜெனிவா சென்றிருந்த இலங்கை மனித உரிமை ஆர்வலர்கள் அரச குழுவினரால் அச்சுறுத்தப் பட்டிருந்ததாக ஐ.நா.மனித உரிமை பேரவை ஆணையாளர் குற்றம் சுமத்தியிருந்தார்.

தமிழ் மற்றும் சிங்கள அரச சார்பற்ற நிறுவனங்கள் இவ்வாறு அச்சுறுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்திருந்தார். 71 பேர் கொண்ட இலங்கைக் குழுவில் அமைச்சர் மகிந்த சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன, ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் பந்துல ஜயசேகர ஆகியோர் இந்த அச்சுறுத்தல் நடவடிக்கையில் முன்நின்றதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்தக் குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசாங்கம் நேற்றைய தினம் நிராகரித்துள்ளது

### நல்லிணக்கத்திற்காகவே...

வாக்களித்தமை வரவேற்கத்தக்க விடயமாகவே கூற வேண்டும். எவ்வளவு விரைவாக செயற்பட முடியுமோ அவ்வளவு விரைவாக இலங்கை செயற்பட வேண்டும்.

இலங்கை அரசு தனது சொந்த மக்களுக்கு கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு நாங்கள் கடந்த நவம்பர் மாதத்திலிருந்து கேட்டுக் கொண்டுவருகிறோம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, உண்மை களைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் ஆக்கபூர்வமான நிகழ்ச்சி நிரல் ஒன்றை விரைவில் முன்வைக்கவே வேண்டுமென இலங்கை அரசாங்கத்தை கேட்டுக் கொள்வதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் விக்டோரியா நூலண்ட் தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசாங்கத்திடம் கடந்த நவம்பர் மாதம் முதல் நாம் விடுத்து வந்த கோரிக்கைக்கும், ஜெனிவா தீர்மானத்திற்கும் எவ்வித வித்தியாசங்களும் இல்லை

உண்மைகளைக் கண்டறிவதறகான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப் போகிறது என்பதே சர்வதேச சமூகத்தின் கேள்வியாக உள்ளது

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் விரைவில் நடை முறைப் படுத்த வேண்டும் என நாம் பல மாதங்களாகக் கோரிக்கை விடுத்துவந்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### குப்பி விளக்கால்...

பயின்று வந்தவருமான சந்திரசேகரம் சுஜித்தா (வயது-16) என்ற மாணவியே இவ்வாறு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தவராவார்.

கடந்த திங்கட்கிழமை இரவு மேசையில் எரிந்து கொண்டிருந்த குப்பி விளக்கு தட்டுண்டு வீழ்ந்து அணைந்துள்ளது. இதனால் அதனுள் இருந்த மண்ணெண்ணெய் மாணவியின் சட்டையிலும் பட்டுள்ளது. இதனை அறியாத மாணவி விளக்கைச் சரி செய்து மீண்டும் தீயைப் பற்ற வைத்தபோது மாணவியின் சட்டையிலும் தீ பிடித்தது. இதனால் அவர் தீக்காயத்திற்குள்ளாகியதாகவும் தெரியவருகின்றது.

இத்தீயை அணைப்பதற்காக மாணவி தரையில் வீழ்ந்து உருண்டபோதும் தீயினை ஏனையவர்களின் துணையுடனேயே அணைக்க முடிந்திருக்கிறது.

இதன்பின்னர் மாணவிவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

### வாக்குறுதிகளை...

ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் சர்வதேச சமூகத்துடன் நட்புறவுடன் செயற்பட வேண்டியதன் அவசியத்தை இலங்கை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும்

சர்வதேசத்திற்கு எதிராக அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஒட்டுமொத்த நாட்டுக்கும் ஆபத்தாக அமையக்கூடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

### நிலையான....

ஆசிய பசுபிக் பிராந்திய வலயப் பணிப்பாளர் சாம் சர்ப்பாரி தெரிவித்துள்ளார். இந்தத் தீர்மானத்திற்கு நைஜீ ரியா, இந்தியா மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகள் ஆதரவளித்துள்ளன. எனவே இதனை வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையிலான போராட்டமாக கருத முடியாது.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தவறான திசையில் பயணிப்பதாக சர்வதேச சமூகம் கருதுகின்றது.

மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீதான அச்சுறுத்தல்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல அமைதியான முறையில் விமர்சனங்களை வெளியிடுவோர் பகிரங்கமாக அச்சுறுத்தப்படுவது கண்டிக்கப்பட வேண்டியது.

தீர்மானத்தை சரியான முறையில் அமுல்படுத்த சர்வதேச சமூகம் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

### இலவசங்களை...

இருந்ததாகத் தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். குறிப்பாக, இந்நாட்டில் இலவசமாக வழங்கப்படும் கல்வி மற்றும் சுகாதாரம் போன்றவற்றை அனுபவித்து விட்டு அற்ப சொற்ப டொலர்களுக்காக தமது தாய் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் கும்பல்களானது சர்வதேச எதிர்ப்பு சக்திகளையும் விடவும் பலம்வாய்ந்ததாக இருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போது அவுஸ்ரேலியாவில் சிகிச்சை பெற்றுவரும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தொலைபேசி மூலம் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தொடர்ந்து கூறும் போது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம், நாட்டின் மிகவும் முக்கியமான தேவையாக விளங்கிய இலக்கை அடைந்துள்ளது. ஆகவே ஏனைய இலக்குகளையும் நாம் இலேசாக அடைந்து விடுவோம்.

தமது தாய் நாட்டை நேசிக்கும் மக்களின் ஆதரவுடன் சர்வதேச சமூகத்தினரால் முன்வைக்கப்படும் எந்தவொரு அழுத்தங்களுக்கும் முகம்கொடுக்க அரசாங்கமும், ஜனாதிபதியும் தயாராகவுள்ளனர் எனத் தெரிவித்தார்.

### இந்தியாவுக்கு...

நாட்டுக்கு எதிரான பாதுகாப்பு அச்சுறுத்தல்களைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தியா முயற்சிசெய்ய வேண்டும்.

தற்போதுள்ள சூழ்நிலையில், சீனா, பிராந்தியத்தில் முன்னிலைக்கு வருவதை தடுப்பதற்கு இலங்கையுடன் இணைந்து இந்தியா செயற்படவேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

இப்படியான நிலைமைகள் இந்தியாவின் பாதுகாப்பு முறைமைகளில் நெருக்கடி நிலைமையைத் தோற்றுவிக்கும்.

இந்தியாவின் சகலவித பாதுகாப்புத்துறை சார் விடயங்களில் கடற்பிராந்திய பாதுகாப்புத் தொடர்பில் இலங்கை தீர்க்கமான முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### இந்தியாவின்...

இலங்கையின் போராட்டத்தில், இந்திய அரசும் மக்களும் இலங்கையின் பக்கம் உறுதியுடன் நின்றதாக மன்மோகன் சிங் தெரிவித்திருக்கிறார். இலங்கையிலும், இந்தியாவிலும் பல்வேறு அப்பாவி உயிர்களைப் பலிகொண்ட நீண்ட மோதல்கள் கடந்த 2009 மே மாதம் முடிவுக்கு வந்தது, நியாயமான தேசிய நல்லிணக்கத்துக்கும், இலங்கையின் அனைத்துத் தரப்பு மக்களின் மேம்பாட்டுக்கும் வழிவகுத்துக் கொடுத்ததாகக் கூறியுள்ள மன்மோகன் சிங், அதில் கணிசமான முன்னேற்றமும் கண்டுள்ளதாக இலங்கையைப் பாராட்டியுள்ளார். குறிப்பாக, இலங்கை நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த முனைந்துள்ள ஜனாதிபதியின் நோக்கத்தையும் பாராட்டுவதாக மன்மோகன் சிங் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் 13ஆவது அரசியல் சட்டத் திருத்தங்களை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அதன் மூலம் நிரந்தரமான அரசியல் தீர்வு கிடைக்கும் என்றும் இலங்கை ஜனாதிபதியை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்தியுள்ளார்.

### பிரேரணைக்கு....

கழகத்தின் அழுத்தத்தின் பேராலேயே இந்தியா இலங்கைக்கு எதிராக வாக்களித்ததாக அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வடக்குடன் இணைவதா என்பதை கிழக்கு மக்கள் தீர்மானிக்க வேண்டும்

## என்கிறார் முதல்வர் பிள்ளையான்



(மட்டக்களப்பு)

கிழக்கை வடக்குடன் இணைப்பதா அல்லது இல்லையா என்பதை கிழக்கு மக்களே தீர்மானிக்க வேண்டும். கிழக்கு மாகாணத்தை வடக்குடன் இணைப்பதைப் பற்றி வடக்குத் தலைமைகள் தீர்மானிக்க வேண்டிய அவசியமில்லையென கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு இணைப்புப் பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பேசி வருகின்றனர். தற்போது கிழக்கு மாகாணம் சகல துறைகளிலும் துரிதமாக வளர்ச்சியடைந்து வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களுக்கு உருப்படியான தீர்வுத் திட்டம் எதனையும் முன்வைக்கப்போவதில்லை. தமிழன், தமிழீழம் என்று மக்களை உசுப்பேத்தினார்களேயொழிய, இதுவரையில் தமிழ் மக்களுக்கு எதனையும் பெற்றுத்தரவில்லை. இத்தனை அழிவுகளை சந்தித்த பின்னர் அவர்கள் இன்று மாகாணசபை முறைமை பற்றிப் பேசுகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேசுவதற்காக கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு நான் கடிதம் அனுப்பி மூன்று மாதங்களாகின்றன. இன்னும் பதில் கிடைக்கவில்லை. கூட்டமைப்பின் உபதலைவர் செல்வராசா நிகழ்வொன்றில் பேசுகையில் விரைவில் இதற்கான பதில் கிடைக்குமென கூறினார். அவர் இதனைக் கூறியும் ஒரு மாதம் கடந்துவிட்டது. இன்னமும் எந்தவித பதிலும் இல்லை.

வடக்கைச் சேர்ந்தவர்கள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களை தாழ்த்தப்பட்டவர்களாக பார்க்கின்ற மனப்பாங்கு இன்னும் மாறவில்லை. நான் எட்டு வருடங்களுக்கு மேல் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்தபோது பல அனுபவங்களைச் சந்தித்திருக்கின்றேன்.

மட்டக்களப்பான் மடையனென்றும் மந்திரவாதிகளென்றும் சொல்வார்கள். நாம் அவர்கள் பக்கமிருந்தால் எம்மை நல்லவர்களென்று சொல்வார்கள். ஏதாவது அவர்களுக்கு எதிராகச் சொல்லிவிட்டால் துரோகியென்பார்கள்.

போராட்ட காலங்களில் பாரிய சரித்திர வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்தவர்கள் கிழக்கு மாகாணப் போராளிகளே. அவ்வாறான சரித்திர வெற்றிகளைப் பெற்றுக்கொடுத்த போராளிகளை வெருகலில் படுகொலை செய்தார்கள்.

கடந்தகால கசப்பான அனுபவங்கள் எப்படி இருப்பினும் மாகாணசபை முறைமை மூலம் கிழக்கு மாகாணம் துரிதமாக அபிவிருத்தியடைய வேண்டும். எமது மக்கள் நிம்மதியாக வாழ வேண்டுமென்பதே எமது எண்ணம். இதற்கிணங்க மக்களும் சிந்தித்து உண்மைகளை உணர்ந்து செயற்பட வேண்டும் என்றார்.

# சம்பந்தன், சுமந்திரன் கூட்டத்தில் இல்லை

## உறுதிப்படுத்தினார் சிவாஜிலிங்கம்

(வல்வெட்டித்துறை)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் தானும் சிறிகாந்தாவும் கலந்துகொண்டதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன், சுமந்திரன் எம்.பி இருவரும் கலந்துகொள்ளவில்லை என ரெலோவின் அரசியல் பிரிவுத் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கம் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொழும்பிலுள்ள கூட்டமைப்பின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் 2 மணி நேரமாக கூட்டம் இடம்பெற்றது. இதில் தமிழரசுக் கட்சியின் சார்பில் மாவை சேனாதிராசா மட்டும் பங்குபற்றி இருந்தார்.

எனினும் கூட்டத்தில் பங்குபற்றுவதாக இருந்த இரா.சம்பந்தன், சுமந்திரன் இருவரும் நாம் இருவரும் கூட்டத்தில் பங்குபற்றிய காரணத்தால் கலந்துகொள்ளவில்லை என அறிந்துகொண்டோம்.

அத்துடன் ரெலோவின் சார்பில் கலந்துகொண்டவர்களில் ஒருவரான செல்வம் எம்.பி. ரெலோவின் சார்பில் கூட்டத்தில் பங்குபற்றுபவர்கள் யார் என்பதை கட்சியே முடிவுசெய்யும் எனவும் வேறு எவரும் அல்ல எனவும் தெரிவித்தார். என அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிவாஜிலிங்கம், சிறீகாந்தா இருவரும் கூட்டத்தில் பங்குபற்றினால் தான் கலந்துகொள்ளப் போவதில்லையென சம்பந்தன் கூறியிருந்தார் என நேற்றைய தினம் தினமுரசு செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குடாநாட்டின் தற்போதைய நிலை கனேடியக் குழு ஒரு மணிநேரம் பேச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிற்கான விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் மாலை யாழ். நகருக்கு வருகை தந்த கனேடிய நாடாளுமன்ற உறுப்பி னர்கள் உள்ளடங்கிய குழுவினர் நேற்றுக்காலை யாழ். ஆயர் இல்லத்தில் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவினரைச் சந்தித்து சுமார் ஒரு மணிநேரம் யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலைமை குறித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் கிறின் அலெக்ஸ் சாண்டர், செனட்டர் வேர்னன் வைற் அடங்கிய குழுவினருக்கும் சமாதானத்திற்கும் நல்லெணணத்திற்குமான மக்கள் குழுவின் தலைவரும் யாழ். மறை மாவட்ட ஆயருமான தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, செயலாளர் பரமநாதன், யாழ்.வணிகர் கழகத்தின் பிரதிநிதி, யாழ்.வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்தின் பிரதிநிதி உள்ளிட்டவர்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

இதன்போது சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவினரினால் யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக மகஜர் ஒன்றும் கனேடியக் குழுவினரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.



உயர்பாதுகாப்பு வலயம், மீள் குடியமர்வு, வீடமைப்பு, போக்குவரத்து, கல்வி வசதி குறித்தும் இக்கலந்துரையாடலில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

இதேவேளை இலங்கை அரசாங்கத்தின் மீதான ஜெனிவாத் தீர்மானம் ஐ.நா.பாதுகாப்புச் சபையின் தீர்மானம் போன்று இல்லாதிருந்தாலும் தமிழ் மக்களது பிரச்சினைகளை முதன் முறையாக சர்வதேசத்திடம் எடுத்துச் சென்றிருப்பதாக இக்கலந்துரையாடலில் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவினரிடம் கனேடிய குழுவினர் தெரிவித்திருப்பதாகவும் தெரியவருகின்றது.

இக்குழுவினர் நேற்று முன்தினம் மாலை யாழ்.செயலகத்தில் யாழ்.அரச அதிபரைச் சந்தித்தும் கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

# மின்சார சபையினரின் தவறு பொதுமக்களுக்கு பாரிய நட்டம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் தெற்குப் பகுதியில் உள்ள பல வீடுகளில் நேற்று மாலை திடீரென தொலைக்காட்சிப் பெட்டிகள் வெடித்துச் சிதறின.

மின்சாரத் தாக்கத்தினாலேயே குறித்த வெடிப்புச் சம்பவங்கள் ஏற்பட்டதாகத் தெரியவருகின்றது. வீதி அகலிப்பு காரணமாக பகல் வேளை மின்சாரம் நிறுத்தப்பட்டு, மின் இணைப்புக்கள் கழற்றப்பட்டு வேலைகள் நடைபெறுவது வழக்கம்.

வழமைபோல் நேற்று மாலை மின்சார வயர்களை மீள இணைக்கும் போது ஏற்பட்ட தவறு காரணமாகவே குறித்த வெடிப்புச் சம்பவித்ததாகவும் தெரியவருகின்றது.

இச்சம்பவத்தால் ஏற்பட்ட இழப்பிற்கு யாரிடம் முறையிடுவது, தமது சொத்துக்களின் சேதத்திற்கு யாரிடம் நிவாரணம் கேட்பது என செய்வதறியாது மக்கள் அங்கலாய்ப்பதாக அப்பகுதி மக்கள் தினமுரசுக்குத் தெரிவித்தனர்.

# வடக்கில் நீர்த் தட்டுப்பாடு நிவர்த்திக்க நடவடிக்கை

(கொழும்பு)

வடபகுதி தண்ணீர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக மொரகஹகந்தயில் இருந்து புதிய கால்வாய் கட்டமைப்பு ஒன்றை நிர்மாணிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சுமார் 125 கிலோமீற்றர் தூரத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்தக் கால்வாய்க் கட்டமைப்பு இலங்கையின் மீக நீண்ட கால்வாய் மார்க்கமாகும்.

இந்த கால்வாய் மார்க்கத்தின் ஊடாக கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு உள்ளிட்ட பிரதேசங்களில் நிலவுகின்ற தண்ணீர் தட்டுப்பாட்டிற்கு தீர்வுகாணப்படவுள்ளது.

கால்வாய் பணிகளுக்கான திட்ட வரைபடத்தை உருவாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

இருபக்க கொங்கிரீட் மதில்களை கொண்டதாக இந்த கால்வாய்க் கட்டமைப்பு நிர்மாணிக்கப்படவுள்ளது. இதன்மூலம் புதிய விவசாய வலயமொன்றிற்காக நீர் விநியோகத்தை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

# இலங்கைக் குழு நாடு திரும்பியது

(கொழும்பு)

ஜெனிவா மனித உரிமைகள் சபை மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றிருந்த இலங்கைக் குழுவினர் நேற்றுக் காலை நாடு திரும்பினர்.

அமைச்சர் மகிந்த சமரசிங்கவின் தலைமையில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் உட்பட பல அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜெனிவா சென்றிருந்தனர்.

இலங்கை தொடர்பில் அமெரிக்கா முன்வைத்த பிரேரணை குறித்து சர்வதேச நாடுகளுக்கு தெளிவுபடுத்தும் நோக்கில் இவர்கள் ஜெனிவா சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சுஷ்மா ஸ்வராஜ் குழுவினரின் இலங்கை விஜயம் ஒத்திவைப்பு

(புதுடில்லி)

இந்திய நாடாளுமன்றத்தின் எதிர்கட்சித் தலைவர் சுஷ்மா ஸ்வராஜ் உள்ளிட்ட குழுவினர் தமது இலங்கை விஜயத்தை ஒத்திவைத்துள்ள்னர்.

இந்திய அனைத்துக் கட்சி நாடாளுமன்ற பிரதிநிதிகள் குழு எதிர்வரும் ஏப்ரல் மாதம் இலங்கை வரத் திட்டமிட்டி ருந்தனர்.

எனினும், ஜெனிவா மனிதவுரிமைகள் பேரவையில் இந்தியா, இலங்கைக்கு எதிராக வாக்களித்த நிலையில், தமது பயணத்தின் போது இலங்கையில் இந்தியாவிற்கு எதிராகக் குரல்கள் எழுப்பப்படலாம் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்காரணமாக, தமது பயணம் தற்போதைய தருணத்தில் இடம்பெறாது என அவர்கள் தெரிவித்துள்ளதாக ரைம்ஸ் ஒப் இந்தியா தெரிவித்துள்ளது.



சுஷ்மா ஸ்வராஜ் உள்ளிட்டோரின் விஜயம் குறித்து இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சு இலங்கை அரசாங்கத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தும் என காங்கிரஸ் கட்சியின் ராஜ்ய சபா உறுப்பினரும், தமிழ்நாடு காங்கிரஸ் பிரிவு தலைவருமான பி.எஸ்.ஞானதேசிகன் தெரிவித்துள்ளார்.

அவர்களின் பயணம் தொடர்பில் குழுத்தலைவரிடம் மீண்டும் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# தூக்கில் தொங்கிய நிலையில் வயோதிபரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்கு வீதியில் உள்ள வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீட்டின் குளியலறையில் இருந்து நேற்று முன்தினம் இரவு இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் குறித்த வீட்டில் வசிக்கும் சிதம்பரப்பிள்ளை சண்முகநாதன் (வயது 82) என தெரியவந்துள்ளது.

சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் குறித்து யாழ். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மார்ச் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.